சிவமயம்.

செந்தமிழ்.

தொகுதி-௬] பிலவங்க௵ பங்குனி௴ [பகுதி-௫.

யாப்பருங்கலக்காரிகை.

நூறுவண்ணம்.

தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை சொற்றவற்றைப்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்தி
ஓங்கேர் குறினெடில் வல்லின மெல்லின மோடிடையைத்
தாங்கா வுறழ்தர வண்ணங்க ணூறுந் தலைப்படுமே.

இது யாப்பருங்கலக்காரிகையிலே "வண்ணங்கணூறு" என்று இறுதியிலே தொகுத்து முடித்த நூறுவண்ணங்களையும் ஒருவாறு சுருக்கிக்கூறிய காரிகை. யாப்பருங்கலக்காரிகையுரைகாரர் யாவரும் இச்செய்யுளை யாதோ பிறநூலிலுள்ளது என்றுகருதி உரையிலே எடுத்துக்காட்டினர். மூலபாட வரிசையிலே சேர்த்து உரைகூறப் படத்தக்க தொன்று என்பதும், இதனையும் ஆசிரியரே கூறினார் என்பதும் ஒழிபியலிறுதியிலே வரும் முதனினைப்புக் காரிகையிலே, "சீரியதூங் கேந்தடுக்கு" என்றதனாலும் தொகையானும் ஆராய்வார்க்கு இனிது புலப்படும். அவரெல்லாம் முதற் செய்யுட்கணின்ற "ஒப்பும்" என்புழி உம்மை கொண்டே வண்ணங்களை விரிக்கும் எண்ணமுடையராயினர்.

(இ-ள்) தூங்கு, ஏந்து, அடுக்கல், பிரிதல், மயங்கு என்பனவற்றோடு இசை என்பதனைச் சேர்த்துத் தூங்கிசை, ஏந்திசை, பிரிந்திசை, மயங்கிசை என்று சொல்லி அவைகளை அகவல், ஒழுகல், வலி, மெலி என்பனவற்றின் பாங்கே நிறுத்திக் குறில், நெடில், வலி, மெலி, இடை என்பவற்றை அவைகட்கு முன்னே நிறுத்தி உறழும்போது நூறு வண்ணங்களும் வந்து பொருந்தும். எ-று.

*

தூங்கிசைவண்ணம்.

தூங்கிசையும் அகவல் முதலிய நான்கையும் தனித்தனி கூட்டுங்கால் நான்காகும். அந்நான்கோடும் குறில்முதலிய ஐந்தனையுந் தனித்தனி கூட்டுங்கால் இருபது ஆகும். இருபதும் பெரும்பாலும் முதிர்ந்த பெண்யானை நடப்பது போலவும், ஓந்தி முதலியன நடப்பது போலவும் நடந்து தூங்கி இசைக்கும் இசையுடையதாய் வரும்.

வரலாறு.

க. குறிலகவற்றூங்கிசைவண்ணம்.
உ. நெடிலகவற் றூங்கிசை வண்ணம்.
ங. வலியகவற் றூங்கிசை வண்ணம்.
ச. மெலியகவற் றூங்கிசை வண்ணம்.
ரு. இடையகவற் றூங்கிசை வண்ணம்.
சு. குறிலொழுகற் றூங்கிசை வண்ணம்.
எ. நெடிலொழுகற் றூங்கிசை வண்ணம்.
அ. வலியொழுகற் றூங்கிசை வண்ணம்.
கூ. மெலியொழுகற் றூங்கிசை வண்ணம்.
கO. இடையொழுகற்றூங்கிசைவண்ணம்.
கக. குறில் வல்லிசைத் தூங்கிசை வண்ணம்.
கஉ. நெடில் வல்லிசைத் தூங்கிசை வண்ணம்.
கங. வலிவல்லிசைத்தூங்கிசை வண்ணம்
கச. மெலிவல்லிசைத் தூங்கிசை வண்ணம்.
கரு. இடை வல்லிசைத் தூங்கிசை வண்ணம்
கசு. குறின் மெல்லிசைத் தூங்கிசை வண்ணம்
கஎ. நெடின் மெல்லிசைத் தூங்கிசைவண்ணம்
கஅ. வலி மெல்லிசைத் தூங்கிசைவண்ணம்
ககூ. மெலி மெல்லிசைத் தூங்கிசை வண்ணம்
உO. இடைமெல்லிசைத் தூங்கிசை வண்ணம்

ஏந்திசை வண்ணம்.

ஏந்திசையும் அகவன் முதலியவற்றோடும் பின் குறில் முதலியவற்றோடும் கூட்டுங்கால் இருபதாகும்; இருபதும் மதயானையின் நடைபோலவும், படம் விரித்தாடும் பாம்பின் கிளர்ச்சிபோலவும் ஓங்கி இசைக்கும் இசையுடையதாய் வரும்.

வரலாறு.

௧. குறிலகவ லேந்திசை வண்ணம்.
௨. நெடிலகவ லேந்திசை வண்ணம்.
௩. வலியகவ லேந்திசை வண்ணம்.
௪. மெலியகவ லேந்திசை வண்ணம்.
௫. இடையகவ லேந்திசை வண்ணம்.
௬. குறிலொழுக லேந்திசை வண்ணம்.
௭. நெடிலொழுக லேந்திசை வண்ணம்.
௮. வலியொழுக லேந்திசை வண்ணம்.
௯. மெலியொழுக லேந்திசை வண்ணம்.
௧௦. இடையொழுகலேந்திசை வண்ணம்.
௧௧. குறில்வல்லிசையேந்திசை வண்ணம்.
௧௨. நெடில்வல்லிசையேந்திசைவண்ணம்.
௧௩. வலிவல்லிசை யேந்திசை வண்ணம்.
௧௪. மெலிவல்லிசை யேந்திசை வண்ணம்.
௧௫. இடைவல்லிசையேந்திசை வண்ணம்.
௧௬. குறின் மெல்லிசை யேந்திசை வண்ணம்.
௧௭. நெடின் மெல்லிசை யேந்திசை வண்ணம்.
௧௮. வலி மெல்லிசையேந்திசை வண்ணம்.
௧௯. மெலி மெல்லிசை யேந்திசை வண்ணம்.
௨௦. இடை மெல்லிசை யேந்திசை வண்ணம்.

அடுக்கிசை வண்ணம்.

அடுக்கிசையும் அகவல் முதலியவற்றோடும், பின் குறில் முதலியவற்றோடும் கூட்டுங்கால் இருபதாகும். இருபதும் ஏற்றிழிவான நிலத்திலே சகடத்தின் உருளுகை போலவும், சாரசம் முதலியவற்றின் ஒலி போலவும் அடுக்கியிசைக்கும் இசையுடையதாய் வரும்.

வரலாறு.

௧. குறிலகவலடுக்கிசைவண்ணம்
௨. நெடிலகவலடுக்கிசைவண்ணம்
௩. வலியகவலடுக்கிசைவண்ணம்
௪. மெலியகவலடுக்கிசைவண்ணம்
௫. இடையக வலடுக்கிசை வண்ணம்
௬. குறிலொழுகலடுக்கிசைவண்ணம்
௭. நெடிலொழுகலடுக்கிசைவண்ணம்
௮. வலியொழுகலடுக்கிசைவண்ணம்
௯. மெலியொழுகலடுக்கிசைவண்ணம்
௧௦. இடையொழுகலடுக்கிசைவண்ணம்
௧௧. குறில்வல்லிசையடுக்கிசைவண்ணம்
௧௨. நெடில்வல்லிசையடுக்கிசைவண்ணம்
௧௩. வலிவல்லிசையடுக்கிசைவண்ணம்
௧௪. மெலிவல்லிசையடுக்கிசைவண்ணம்
௧௫. இடைவல்லிசையடுக்கிசைவண்ணம்
௧௬. குறின்மெல்லிசையடுக்கிசைவண்ணம்
௧௭. நெடில் மெல்லிசையடுக்கிசை வண்ணம்
௧௮. வலி மெல்லிசையடுக்கிசை வண்ணம்
௧௯. மெலிமெல்லிசையடுக்கிசை வண்ணம்
௨௦. இடை மெல்லிசையடுக்கிசைவண்ணம்

பிரிந்திசைவண்ணம்.

பிரிந்திசையும் அகவல் முதலியவற்றோடும், பின் குறில் முதலியவற்றோடும் கூட்டுங்கால் இருபதாகும்; இருபதும் பெருங் குதிரை பாய்வதும், தாளம் ஒலிப்பதும்போலப் பிரிந்திசைக்கும் இசையுடையதாய்வரும்.

வரலாறு.

௧. குறிலகவற்பிரிந்திசைவண்ணம்
௨. நெடிலகவற்பிரிந்திசைவண்ணம்
௩. வலியகவற்பிரிந்திசைவண்ணம்
௪. மெலியகவற்பிரிந்திசைவண்ணம்
௫. இடையகவற்பிரிந்திசைவண்ணம்
௬. குறிலொழுகற்பிரிந்திசைவண்ணம்
௭. நெடிலொழுகற்பிரிந்திசைவண்ணம்
௮. வலியொழுகற்பிரிந்திசைவண்ணம்
௯. மெலியொழுகற்பிரிந்திசைவண்ணம்
௧௦. இடையொழுகற்பிரிந்திசைவண்ணம்
௧௧. குறில்வல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௨. நெடில்வல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௩. வலிவல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௪. மெலிவல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௫. இடைவல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௬. குறின்மெல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௭. நெடின்மெல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௮. வலிமெல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௧௯. மெலிமெல்லிசைப்பிரிந்திசைவண்ணம்
௨௦. இடைமெல்லிசைப்பிரிந்திசைவண்ணம்

மயங்கிசைவண்ணம்.

மயங்கிசையும் அகவன் முதலியவற்றோடும் பின்குறின்முதலியவற்றோடும் கூட்டுங்கால் இருபதாகும். இருபதும் மதுகரத்துவனி போலவும்,மண்டூகத்தொனி முதலியன போலவும் மயங்கிசைக்கும் இசையுடையதாய் வரும்.

வரலாறு.

௧. குறிலகவன்மயங்கிசைவண்ணம்
௨. நெடிலகவன்மயங்கிசைவண்ணம்
௩. வலியகவன்மயங்கிசைவண்ணம்
௪. மெலியகவன்மயங்கிசைவண்ணம்
௫. இடையகவன்மயங்கிசைவண்ணம்
௬. குறிலொழுகன்மயங்கிசைவண்ணம்
௭. நெடிலொழுகன்மயங்கிசைவண்ணம்
௮. வலியொழுகன்மயங்கிசைவண்ணம்
௯. மெலியொழுகன்மயங்கிசைவண்ணம்
௰. இடையொழுகன்மயங்கிசைவண்ணம்
௧௧. குறில்வல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௨. நெடில்வல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௩. வலிவல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௪. மெலிவல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௫. இடைவல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௬. குறின்மெல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௭. நெடின்மெல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௮. வலிமெல்லிசைமயங்கிசைவண்ணம்
௧௯. மெலிமெல்லிசைமயங்கிசைவண்ணம்
௨௰. இடைமெல்லிசைமயங்கிசைவண்ணம்

இவ்வாறே வண்ணங்கள் நூறும் வரும். இந்நூறு வண்ணமுங்கூறுதற்கு முதனூலாய் நின்றது அவிநயர் யாப்பு என்பர். தொல்காப்பியர் கூறிய வண்ணங்கள் இருபது. அவையும் இவையும் ஒற்றுமையுடையனவல்ல. வண்ணமாவது பெரும்பாலும் எழுத்துச்செறிந்துநிற்கும் வகையாற் பிறப்பதோர் இசைவேறுபாடு. வண்ணம் தமிழ்க்கவிகளுக்கே உரியது. வண்ணமும் வேறே, சந்தமும் வேறே. சந்தமாவது எழுத்தளவை முதலிய காரணமாக நிகழ்வதோர் இசைவேறுபாடு; அதுவடமொழிக்கே உரியது.

யாப்பருங்கலக் காரிகையிலே சிலசில பாகங்களுக்குப் புதியனவாய்த் தோற்றிய உரைகள் இந்தச் செந்தமிழ்ப் பத்திரிகையிலே முன்னரும் வெளிப்படுத்தப் பட்டன. இன்னும் பலபாகங்கள் புத்துரைகூறற்பாலவாயின. அவையெல்லாம் அதற்கோர் புத்துரையாய்த் திரண்டு புத்தகரூபமாய் வருகின்றன. சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலையார் அச்சிடுகின்றனர், இவ்வண்ணங்கள் சிலவற்றின் உதாரணமும் அதன்பால்வரும். இவ்வண்ணக் காரிகையும் மற்றையவற்றோடு சேர்ந்துவரும்.

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப் பிள்ளை.
சுன்னாகம்.

பெரியபுராண அரும்பதவிளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

குங்கிலியக்கலயநாயனார்புராணம்.

(க) வாய்ப்புற்ற நீர் வளத்தால் உயர்ந்து நிலைபெற்ற காவிரி நாட்டிலே இயைந்த சீரையுடைய அந்தணர் வாழும் மதில்சூழ்ந்தநகரம்யாதெனில், திரை மறிகின்ற நீரையுடைய கங்காநதி தோய்ந்த சடையையுடையவரும், முன்னரே தமது அடியாராகிய மார்க்கண்டேயர்மீதுவந்த யமனைக்கொன்ற சிவந்த பாதத்தையுடையவருமாகிய சிவபெருமான் நிலைபெற்றிருப்பதாய கடவூராகும்.

(உ) செழித்த திருக்கடவூரில் எந்நாளும் வயல்களிலெல்லாம் விளைகின்ற செந்நெற்களாம், வரம்புகளினெல்லாம் சங்குகளீன்ற முத்துக்களேயாம், பக்கங்களினெல்லாம் யாகசாலைகளாம், அணைகளினெல்லாஞ் செங்கழுநீர்க் கூட்டங்களாம், கமுகங் கூட்டங்களினெல்லாம் மேகங்களாம், அதன் பக்கங்களினெல்லாம் அந்நகரச்சிறப்பைப்பத்துதித்தலாம், செய்கைகளெல்லாம் அறுதொழில்களாம்.

(ங) முப்புரிநூல் வடம்; வடமாகமுறுக்கப்பட்ட நூலென்றுமாம்.

(ச) பாய்ந்து - பாய்தலால்; ஆகாயம்வரைக்குமுயர்ந்த மாடங்களிலுள்ள சாலைகளின் பக்கங்களிலே சிறிது போழ்து படிந்தமுகில்களும்.

(எ) போற்றிச்செல்ல - பேணிநடத்த.

(கக) நல்லபேறு இதனினும்பார்க்க வேறுண்டோ; பெறற்கரியபேற்றைப் பெற்றுவைத்து.

(கங) அடியேனை அடிமையாக வுடையவரும், நம்மையாள்பவருமாகிய ஏகருடைய பொக்கிஷசாலையில் ஒருசேர ஒடுக்கி எல்லாவற்றையும் அயர்த்தெழுகின்ற அன்புமிக.

(கச) கலயனாயனாராலயத்திருப்பச் சிவபெருமானுடைய திருவருளினால் குபேரனானவன் தன்னுடைய பெரியதிரவியங்களைக்கூட்டிப் பூமியில் நெருங்க எவ்விடங்களினும் பொற்குவையும் நெல்லும் உவமையற்ற பலவளங்களும் பொலிய நிலைபெற்ற பெரியஐசுவரியமாக்கி வீட்டில் மிகவும் வைத்தான். தூர்த்தல் - கூட்டலென்னும் பொருட்டு.

(கசு) உள்ள - உள்ளன.

(கஎ) ஆர்வமன்பு - நெகிழ்ந்த அன்பு

(உ0) என்னையுமாளுந் தன்மைத்தாய்ச் சிவபெருமானுடைய திருவருளிருந்தவாறென்னையோ வென்று கைதலைமேல்வைத்தார்.

(உஉ) ஊர்தடோறும்பிச்சைசயேற்றுக்கொடுக்கும் ஏகருடைய திருவருளால் பூமியில்,நிறைந்தசெல்வத்தையுடையராய்க்குணத்தின் மேற்பட்டுச்சிறந்த அன்னத்தை நல்ல செழித்த கறிகயிர்நெய்பாலெனுமிவற்றோடு உண்ணும் விருப்புமிக அடியார்க்கீயும் நாளில்.

(உங) செம்மை - நேர்மை. நேர் நில்லாமையால். பூட்டவும்-பூட்டி இழுப்பிக்கவும். கவலையுற்றழுங்கி இவ்வாறு சிலதினங்கழிய.

(உரு) பிராமணர் வாழுஞ் செழுமலர்ச் சோலையை வேலியாகவுடைய திருப்பனந்தாள்.

(உசு)நேர்படாமை - நேர்படாமையால்.

(உஎ) திருமேனியிலுள்ள பூங்கச்சிற் பொருந்திய பொறுமையாகிய கயிற்றைத் தாமும்பூண்டு கழுத்தால் இழுப்பாராயினர். கழுத்தினால் வருந்த - கழுத்தினாலிழுத்தல்.

(உஅ) பொருந்திய ஒருமையாகிய அன்பாகிய நாரினாலுற்ற கயிற்றால். ஒருமையையுடைய அன்பு என்றுமாம்.

(உகூ) மிகுந்த தேர்ப்படையையுடைய. கார்பெறுகானம் - மழையைப்பெற்றகாடு.

(நூச) உண்மை - உளதாந்தன்மை.

(நூரு) தேவக்க - தேன்விளங்குகின்ற. தருதல் - விளங்குதல்.

மானக்கஞ்சாறநாயனார் புராணம்.

(௧) கொம்புத்தேன் கொம்புகளின் வழியாகப்பொழிய, கொழுவிய பழங்களின் ஒழுகுகின்ற சாறு கால்வாய் வழியாகச்சென்று வயலிலுள்ள கருப்பஞ்சாற்றோடு கமழ்கின்ற ஊராகிய கஞ்சாறானது, ஆகாயகங்கையைச் சிவந்த சடையில்வைத்த சிவபெருமானால் விரும்பப்பட்டது, நூனெறியை நன்றாகவுணர்ந்த புலவராற்பாடப்படும் பெருமையின் வலியையுடையது; மேலாறு - ஆகாயகங்கை.

(௨) அக்கஞ்சாறூரின் பக்கங்களில், கண்ணாகிய நீலோற்பலத்தையுடைய கடைசியர்களது பிடுங்குகின்ற களைகளுட்டவறி ஒதுங்கி, உள்ளே பொருந்திய நீரின்றன்மைச் சேர்ச்சியில்மிக்கு மலரினிடமுழுவதுஞ்சிவக்கின்ற குளிர்ந்த நீர்மையையுடைய மிருதுவான செங்கழுநீர்ப்பூவின்மீது விசாலமான நெற்பயிர்கள் தலைகுனிகின்ற மட்குணத்தினலஞ்சிறந்த வளஞ்செறிந்த வயல்களுள்ளன. மள்ளஸ்திரீகள் பிடுங்கிய களைகளிற்றவறிய செங்கழுநீர்மீது நெற்கதிர்கள் வளைந்து கிடக்கும்வயல் பலவுள என்பது கருத்து. இனி, இரட்டுறமொழிதலால், ௨ - ஆம், ௩ - ஆம் அடிகளுக்கு, மனவன்மையுடைய புணர்ச்சியில் ஆசைமிகுந்து மலர்போலுங் கண் சிவக்கும் குளிர்ந்த நீர்மையையுடைய மிருதுவான செங்கழுநீரெனும் பெண்ணுக்கு விசாலித்த நெற்கதிர்களெனும் நாயகர்கள் தலையால் வணங்கும் என்க.

(௩) நெற்கதிர்களைக்காட்டுகின்ற விசாலித்த வயல்களில், முகிலைக்காட்டுகின்ற கூந்தலைப் பிடர்காட்டலால், புனத்திலுள்ள மயிலினியல்பைக்காண்பித்து இடை துவள, கூட்டத்தைக்காட்டும் மள்ளஸ்திரீகளுடைய கண்ணை முயற்களங்கத்தைக்காட்டுகின்ற சந்திரன் தோற்கும் முகமானது காட்ட, அக்கண்ணை வலியகயன்மற்சங்காட்டுந் தடாகங்கள் பலவுள்ளன.

(௪) ஒப்பற்ற இடங்கள், சேற்றழகையுடைய குளிர்ந்த பழனமாகிய வயலிலுள்ள செழித்த நெல்லின் கதிர்கள்போய், வேறாய்ப்பக்கத்தே நெருங்கிய வேலியாகிய பசிய கமுகின் கழுத்தை உரோஞ்சி

ஒன்றற்கொன்று மாறுபெழுகின்ற திண்ணிய குலைகளை விளைத்த லால், வண்டு அலைகின்ற சோலையிலுள்ள மள்ளர்கள் தாறையரிகின்ற நெடிய வளைந்த அரிவாள் போல்வனவாய கதிர்களையுடையன.

(ரு) மாடங்கள் பக்கங்களிலே இரத்தினங்களின் பல ஒளிக ளையும் சூழ்ந்தமதிலையும் உடையன. சபைகள் பக்கங்களிற் கட்டிய புடைவைக்கொடிகளையும் ஸ்தனங்களையுடைய பெண் கொடிகளையும் உடையன. தம்மிடத்துச்செல்வோர் மலர்ப்பாணங்களாற் புலன் சுழல் கின்ற சில வீதிகள் உயர்ந்த நிலைமையுடைய தோரணங்களையும் பூரணகலசங்களையும் உடையன.

(சு) மிக்க நிலையையுடைய இல்லறத்தின் வழியில் வந்து வளம்பெருகுகின்ற தொழில்களும் மிகுந்த உழவு தொழின் மிக்க பெரிய குடிகள் நெருங்கி, அலங்கரிக்கப்பட்ட சாயலான் மயில் போலும் பெண்கள் நடிக்க, அழகிய முழவொலிக்கின்ற திருவிழா நெருங்கிய வீதியையுடைய கஞ்சாறானது இங்ஙனம் விளங்கியது. துவன்றிப்புரிய விளங்கியது என முடிக்க.

(எ) அந்தக்கஞ்சாறாரிற் சிரேட்டமான தலைவராய்.

(அ) பணிவைப்புலப்படுத்தும் வடிவையுடையார். பாம்போடும் பனிமதியை அணிதலையுடைய. அணிவு தொழிற் பெயர்.

(கூ) எதிரே அவ்வடியார் கேட்டற்கு முன் அவர்கள் குறிப்பையறிந்தெவற்றையுங் கொடுப்பவர்.

(கo) அறியாமையை அறியாதார் - அறிதலை அறிந்தவர் என்பது கருத்து.

(கக) குண்டலத்தால் அசைகின்ற வடிந்த காதையுடைய சிவபிரானது திருவருளால், செய்கின்ற வினைப்பயன் சூழ்ந்த இந்தப்பிறவியாகிய சூழலினின்றும் பிழைக்கும் நெறியைத்தமக்குத்தரும்படி.

(கஉ) அளவில் வளத்தருள் பெருக்கி - அளவற்ற செல்வங்களைக்கொடுத்து. பக்கத்துள்ளார் தோத்திரஞ்செய்ய. புறத்தருவார் - ஐவகைத்தாயர்.

*

(கரு) காப்பு - திலதம். அழகிய மேகலையை யணிந்த சிற்று டையுடன்.

(கச) அலங்கரிக்கப்பட்ட தாமரை மலர்போன்ற கைகளி லேந்தி வளர்த்த தாதியர்க்கு நடுவே வீட்டிலுள்ள அழகிய முன்றி லில் மணலாற்சிற்றில் செய்து இரத்தினதாபிதமாகிய ஒலிக்கின்ற குரலேயுடைய சிலம்புகள் அலேயக் கழங்கு விளேயாடன் முதலியவற் றைப் பழகி ஸ்தனமாகிய அரும்பு முகஞ் செய்கின்ற பேதைப்பரு வத்தை யடைந்தனள்.

(கரு) மிக்க அழகானது சரீரத்தின் புறத்தே பொலிய, ஒளி பொருந்திய இடையைத் தனங்கள் வருத்த, சிரிப்பைப் புறத்தே யலராத அரும்புகின்ற முத்துப்போன்ற பற்களென்னும் நறிய அரும்பையும் மெல்லிய கொடிபோலும் இடையினேயும் குளிர்ச்சி பொருந்திய கூந்தலேயும், அழகியதளிர்போன்ற சிவந்த கையையு முடைய குற்றமற்ற அக்குலக்கொழுந்திற்கு மணப்பருவம் வந்து பொருந்த. இவரது கற்பை விளக்குதற்கு முறுவல் புறமலராத என விசேடிக்கப்பட்டது. முறுவலானது புறவிஷயத்தில் அலராத என் பது பொருள்.

(கசு) கழலேயணிந்த ஏயர்கோன்கலிக்காமநாயனுர். மகட்பே சல் - மணம் பேசல்.

(கஎ) முந்தை முறைவிரும்பி -பழையமுறைப்படியுபசரித்து. நமது மரபினுக்குத்தக்க தன்மையாலியையுமென்று மகிழக்கூறி உட ன் பட்டு அனுப்பினுர்.

(கஅ) விரும்பி நின்ற நிலேயாலிருபகுதியார்க்கு முடன் பா டான விவாகத்தொழிற்குச் சுபதினத்தைச் சோதிடர் வகுத்தார். மதிநூல் வல்லவர் - புத்தியால் நூலில்வல்லவர்.

(கக) மூதூரிலே விவாகஞ்செய்யுமிடத்தை அலங்கரித்தார்.

(உ0) மஞ்சாலும் - முகிறவழும்.

(உஉ) திரிபுண்டரம் நிறைந்த நெற்றியின்மேலே மழுத்ததிரு முடியிற்பொருந்திய குடுமியினுச்சியிற்கோத்தணிந்த ஒன்புமணியும்,

முன்னரே விட்டுணுவினுடைய கங்காளத்தைத்தரித்த பொழுது அதிற்கடைந்த வெண்முத்தைப்போலத் திருச்செவியின் மீதசைகின்ற குண்டலமும்.

(உங) அந்த எலும்பாற்செய்த ஒளிபொருந்திய மணிகளைக் கோத்தணிந்த அழகிய தாழ்வடமும், படம்பொருந்திய வலிய பெரிய பாம்பொழியத்திருப்புயங்களின் மீதிட்ட உத்தரீயமும், கருமை பொருந்திய மயிராலாகிய பூணூல் வடமும்.

(உச) ஒப்பற்ற முன்னங்கையில் ஒருமணியைக்கோத்தணிந்த கயிறும்.

(உரு) பொடிமூடி - பொடியால் மூடப்பட்ட. படி - குணம்.

(உசு) எந்தைபிரான் புரிதவத்தோர் - எம்பெருமான் விரும்புந்தவத்தோர். உய்ந்தொழிந்தேன் - உய்ந்து விட்டேன்; ஒழி - துணிவுப்பொருளுணர்த்தும் விகுதி.

(உஎ) மங்கலம் பொருந்திய செயலிங்கு நடப்பதென்னையென்றுவினவ; மங்கலமுற்ற செயலெனமாறுக. சோபனம் - சுபம்.

(உகூ) பரவ - தோத்திரஞ்செய்தலால்.

(௩௦) பொருட்படுத்தி நமக்கு ஆகுமென்று சொல்லப்பெற்றேனென மனத்திற் சிந்தித்து. அடியில் - அடியோடு.

(௩க) பொன்மலர் மாரி விசும்பின் நிலம் நெருங்கத்தூங்கிய. விசும்பின் - விசும்பினின்றும். நிலநெருங்க - பூமியில் நெருங்கும்படி.

(௩உ) விழுங்கங்கையானது மதிக் கொழுந் தலையக் குதித்த சடைக் கூத்தனார்.

(௩௩) இண்டை - மாலைவிசேடம். கைப்பிடிக்க, களிப்ப, புகுந்தார் எனமுடிக்க.

(௩௫) மயிரரியுண்டமையால் மனந்தளர்ந்து. அருள்செய்த - சிவனருள்செய்த.

(௩௬) பெருவதுவை உலகெலாந்தலை சிறப்பத்தனம் பொழிந்து. இனம்பெருக - கூட்டம் மிக.

(கஎ) பொருந்திய நிலப்பிளப்பிற்புகுந்த மாவடுவைக்கடித்தலாலுண்டாய விடேலென்னுமோசையை உரிமையாகக்கேட்க வல்லதாய நாயனார்.

அரிவாட்டாய நாயனார் புராணம்.

(க) கரும்பு - ஆண்வண்டு. விரும்பப்படுகின்ற மிருதுவான கரும்பு கண்ணுடைந்து போக வாய்விட்டுத் தேனைச்சொரியும்.

(உ) செந்நெனிறைந்த வயலிற்களைகட்ட செந்தாமரையானது முன்னமே சங்கீன்றமுத்தைச்சொரிதலால், கையின்மீதுகொண்டு தோன்றுபவராகிய மள்ளர்கள் நிலையான பதுமநிதியை வைத்திருப்போரை ஒத்தனர்.

(ங) குழையையுடைய நீலங்கள், வளங்களின்மிகும் அந்நகரத்தில் வண்டுகள் குடைகின்ற கூந்தலையுடைய பெண்களின் முகத்திலும், நெற்களங்களின் மீதும், கயன்மச்சங்கள் பாய்கின்றவயலினயலிலுள்ள குளங்களிலும் மிகும்; குழையுடை நீலங்களுவர்த்துமைப்பாலுடையோர் முகத்தினிடும் என்பதற்கு, குண்டலங்களையுடைக்கின்ற கண்ணாகிய நீலோற்பலங்களென்க. ஏனைய வெளி.

(ச) வேளாண் குலத்தலைமையார்—வேளாண்குலத்திலே தலைமையையுடையவர்.

(ரு) நெடுங்காலந்தேடியும் அறியாதவிட்டுணு பூமியை அகழ்ந்தும் அறியாத.

(எ) இந்த நல்லதொண்டைத் துன்பம் வந்தடையினும் மனத்தில் நீங்காத செய்கையாகச் செய்ய.

(அ) களிறுண் விளங்கனியாவது ஆகி—யானையுண்ட விளங்கனி பொருந்துவதைப் பொருந்தி.

(க0) நெல்லைத் தேடியறுத்துத் தாம்பெறுங் கூலியவையெல்லாந் திருவமுதுக்காகக்கொண்டு; கார்நெல்லரிசியாகிய கூலியைக்கொண்டுண்ணு நாளில்.

(கஉ) நாடோறு முணவில்லாமையால் வீட்டிலுள்ள கொல்லை யிற்சென்று. கைதரம் - துன்பம். பெய்கலம்-உண்கலம். செய்யும் முறைமையில் வீழலாவண்ணம்.

(கங) கற்பில் அருந்ததிபோன்ற மனைவியார். தண்ணீர்வார்க்க அதனை அமுதுசெய்து, தாயனாரும் அங்ஙனம் நெல்லரிதலாகிய செயல்வினையைமுடித்து நெடுநாள் ஒழுக ஒருநாள்.

(கச) ஆன்பெற்ற ஐந்து - பஞ்சகவ்வியம். அன்புபோலத் தூயஎனமுடிக்க.

(கரு) மதராரானவர் மட்கல மூடுகையால் காதலால் அணைத்தும் என்க.

(கசு) அடிமைகொள்ளு நமதுகடவுள் இப்பொழுது அமுது செய்திலர்போலுமென்று பூட்டியவரிந்த வாளைப்பிடித்துக்குற்றமற நெருக்கு மன்னைக்காட்டிய முறைமையையுடைய மனம் அவ்வன் பினின்று நீங்குதல் கெடக் கழுத்தோடு அக்கழுத்தின் முற்பக்கத்தையும் அரிந்துநின்றாராகிய தாயனார் அநாதியே சகசித்தபிறவியை அரிபவரை ஒத்தார்.

(கஅ) குற்றமற்ற மனத்தையுடைய அன்பரானவர் அரிகின்ற அரிவாளைப்பிடிக்குங் குற்றமற்றகொடையையுடைய கையைவிலக்க, சிவபெருமான் மேலேவீசிய சிவந்த திருக்கரமும், மாம்பிஞ்சைகிவே தனங்கொண்டதற்கடையாளமாக எழுந்த விடேல் விடேல் என்னு மோசையும் கமரினின்று மொருசேர எழுந்தன.

(கசு) வெருக்கொடு - அச்சத்தைக்கொண்டு, அப்பொழுது, பொருந்திய துன்பம் நீங்க. பேணல் - காத்தல்.

(உக) அவர் உடனே நண்ண - அவர்களுடனேசெல்ல.

(உங). கமரே முன்னிலையாகச் சிவனமுது செய்யச் செங்கெல ரிசிசிந்த மாவடு ஓசை செவியிற் பொருந்த அப்பொழுது கேட்ட தொண்டர். முன்னிலை - வழி.

——:o:——

ஆனாய நாயனார் புராணம்.

(க) மேன்மையையுடைய மழநாடெனும் சீர்வளஞ்செறிந்த நாடு, வாசனை நிறைந்த சோலையின் மருங்கே வானிலுள்ளமதிவந்து படிய, நெற்சூடுகள் பரப்பிய வயல்களின் வரம்புகளிலே வண்டுகள் வீழ, பெருமையை மிகச்செய்த நெற்போர்களில் முகில்கள் இளைத்தேற, இவற்றால் மிக்க வளத்தையுடையது.

(உ) நீவி - வஸ்திரம், கொய்சகம்.

(ங) கருப்பாலைகள், வலியநிலையையுடைய மள்ளர்கள் உழக்க எழுந்த இணைமரங்களின் பலமுறைவந்தெழுகின்ற ஓசைபொருந்திய முழக்காலும், அன்னங்கள் பக்கங்களிலேஇருக்கின்றகுளிர்ந்த துறையையுடைய தடாகத்தின் பக்கத்தில் அழகியகருப்பஞ் சாற்றைக் காய்ச்சுதலாலெழும் புகையாலும், முகில்களையுண்டாக்குவன.

(ச) பிரவாகித்த பெரியநதியினுடைய அலைகளாலொதுக்கப்பட்டநீரிலுள்ள சங்குகள் உயர்ந்தஇலையையுடைய வாழைப்புதன்மீது தவழ்ந்து சென்று தங்கிய பச்சிலை சூழ்கின்ற கொடியினூடே தவழ்ந்தேறிப் பாளையைப்போலப் பசியகமுகினுனியில் முத்துக்களைச் சொரிவன.

(ரு) முல்லைநிலத்தைச்சூழ்ந்த பக்கத்திலொருபுறம் அகவிதழ் பொருந்திய மலர்களையுடைய வயல்களினயலில் மிக இளமையான பசுவீனுகின்ற விரைவாகக் கருப்பத்தினது பூர்த்தியானமையைப் பிரசவப்படுத்தலாற் கலக்கிய இளங்கன்று கொல்லையிலுள்ள அறியாமையையுடைய கூட்டமான மான்கன்றுகளுடன் குதித்தோடுகின்றநிறைந்தவளத்தது.

(சா) கார்காலத்தலர்கின்ற முல்லைகளின் குளிர்ந்த பிரகாசம் பொருந்திய வெள்ளிய அரும்புகளிலிருக்கின்ற வண்டுகள் கண்களைப் போலலர்ந்த நீலோற்பலங்களிற்பாயும்படி இருப்பன. காயாமரத்தின் அழகிய வாசனை பொருந்திய கொம்புகளிலிருக்கின்ற அழகிய சிறையையுடைய கொய்யடிநாரைகள் விசாலமாகிய நெற்பயிர் வளர்கின்ற வயல்களிலெழுகின்ற மீன்களிற்பாயும்படி இருப்பன.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

மழையைக் குறிக்கும் ஜந்துக்கள்.

இக்காலத்தில் ஆகாயத்தின் கூறுபாடுகளை அறிவித்தற் பொருட்டு பராமீட்டர் என்னும் யந்திரத்தைச் செய்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் உழவர்கள்முதற் பலரும் அக்கூறு பாடுகளை அநேகம் அறிகுறிகளால் அறிந்து வந்தனர்,

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி—மலை
யாளமின்ன லீழமின்னல் சூழமின்னுது
நேற்றுமின்றுங் கொம்புசுற்றிக் காற்றடிக்குது—கேணி
நீர்ப்படுஞ்சொறித்தவளை கூப்பிடுகுது
சேற்றைநண்டு சேற்றைக்கிள்ளி யேற்றடைக்குது—மழை
தேடியொரு கோடிவானம் பாடியாடுது
போற்றுதிரு மாலழக ரேற்றமாம்பண்ணைச்—சேரி
புள்ளிப்பள்ள ராடிப்பாடித் துள்ளிக்கொள்ளுமே.

(முக்கூடற்பள்ளு.)

என்பன முதலாக நந்நாட்டார் வழங்கும் உழவுப்பாட்டுக்களாலும் இவ்விஷயம் யாவரும் நன்கறிந்தது. ஆனால், இயற்கையாக ஆகாயத்தின் கூறுபாடுகளை அறிவிப்பதில் சில ஜந்துக்கள் இவற்றிலும் எத்தனையோ மடங்கு சிறப்புடையன. ஆதிகாலந்தொட்டு ஜந்துக்களால் கால வித்தியாசங்களைக் கண்டறிந்து கொள்ளுவதெங்கும் வழக்கம்.

பூர்வகாலத்தில் கிரேக்க தேசத்திலும், ரோம தேசத்திலும் நிலத்தையுழுது பண்படுத்தி விதைத்தவுடன் சில பறவைகளும், மிருகங்களும் இருக்குமிருப்பைக்கண்டு அந்த வருஷத்தில் தானியம் நன்றாய் விளையும் விளையாதென்பதை அங்குள்ள குருக்கள் எளிதிற் கண்டுகொள்வார்கள். இதனால் பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் ஆகாயத்தின் தன்மை நன்றாய்ப் புலப்படுவதியற்கையென்று காண்கிறது. இவ்வாறு அறிவதில் மனிதர்களுக்கும் இயற்கையாகத் தெரிவதுமுண்டு. வாதரோகங் கொண்டவர்களுக்கு மழை வருவதற்கு முன்னே உடம்பெல்லாம் ஊசிகொண்டு குத்துவதுபோலிருக்கும். கை கால் ஒடிந்துபோனவர்களும், தூர்மாம்ஸமுள்ளவர்

களும் மழை வருவதற்கு முன்னே உடம்பில் வலியுண்டாவதைப் பற்றி வேண்டியமட்டும் எழுதிவைத்திருக்கிறார்கள். மழைவருவதற்கு முன்னே கிழவிகளுக்குக் குளிர் அதிகமாகி உடம்பெல்லாம் நடுக்கமெடுத்துக் குளிர்காய வேண்டியிருக்கும். உடம்பு குளிர்ந்தால் மழை வருமென்றறிந்து வெளியே போகார்கள்; அன்றியும் மழைக்கு முன்னே சோம்பலுண்டாகும்.

மழை வருமுன்னே சில ஜந்துக்கள் அசையாமல் இருந்தவிடத்திலே தானே இருக்கும்; வேறு சில மிருகங்கள் கூச்சலிட்டு உற்சாகங் கொண்டிருக்கும். மயிலுங் குயிலுங் மழையால் உற்சாகமடையாமையும் அடைதலும் இலக்கியங்களாலும் அறிவோம். நாய்கள் மழைக்கு முன்னே சோம்பலாய்த் தூக்கங்கொண்டு குளிர்காய விரும்பும். பன்றிகள் இருந்த விடத்திலிராமல் குருகுருத்த வண்ணமாக அங்குமிங்குமாய் அலைந்துகொண்டிருக்கும். நாயாயினும் பூனையாயினும் புல்லைக்கடித்தால் மழை உடனே வருமென்றெதிர்பார்க்கலாம். வாத்துக்களும் மயில்களும் இடைவிடாது கத்தினால் உடனே மழை வருமென்றறிந்து கொள்ளலாம். மற்றெல்லாவற்றுள்ளும் மழை வருமென்று காட்டுவதில் நத்தை மிகச்சிறந்தது. பனிநத்தை பகலெல்லாம் ஓர் மூலையிலே யிருந்துவிட்டு அந்திப்பட்டதும் இரவில் வெளியேவந்து செடிகளிலே பெய்யும் பனிநீரை யுண்ணும். மழை வருமென்று கண்டால் நத்தை வெளியேவந்து சுவர்களிலும், மரங்களிலுமேறி மழை பெய்யும்போது தலையை நீட்டிக்கொண்டு சுகமாயிருக்கும்.

எப்பொழுதும் தனித்தாயினும், அல்லது ஆணும் பெண்ணுமாகவாயினும் வாழ்கின்ற சிலந்திப்பூசசிகள் புயல் வருவதற்கு முன்னே பல கூட்டமாகச சேர்ந்திருக்கும்; இவை மற்றக்காலங்களிலே ஒரு நிமிஷமாவது தம்மினத்தோடு ஒன்று சேர்ந்து வாழப்பொறுமல் சண்டையிட்டவண்ணமா யிருக்கும்.

மழைவரப்போகிறதென்ற குறிப்பை யறிந்து எறும்பு அதற்கு முன்னேதானே நல்ல இடந்தேடிச் செல்லுவதை யாருங்காணலாம். "எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது" என்

னும் பழமொழியும், "பொய்யா வெழிலி பெய்விடநோக்கி, முட்டை கொண்டு வற்புலஞ் சேரும், சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்ப" என்னும் புறநானூற்றடிகளும் இதனை வற்புறுத்தல் காண்க.

ஈக்களும் கொசுக்களும் எப்பொழுதும் போல உயரப்பறப்பதைவிட்டு மழைவருமுன்னே கீழேவந்து தரைமட்டமாகப் பறக்கும்; அந்த வேளையில் ஊர்க்குருவிகள் பூமியில் தத்திப்பறந்து அவற்றை உண்பதைப் பார்க்கலாம். மழையின் வரவைத் தவளை நன்றாகக் காட்டும்: மற்றைப் பொழுதைவிட மழை வருவதற்கு முன்னே தவளை ஓயாமல் நெடுநேரம் கத்த ஆரம்பிக்கும்; அன்றியும் அதற்கு முன்னிருந்த அதன் பச்சை நிறம் வெண்சிவப்பாகமாறும். பகலில் தேரை தன்னிடத்தைவிட்டு வெளியே வந்தால் மழை வருமென்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். தேரைகள் சாதாரணமாக இரவிலே தான் வெளியேவரும். மழை பெய்யும்போது கீழாகப் பறக்கும் பூச்சிகளை யுண்ணுதற் பொருட்டு ஊர்க் குருவிகளும் தேரைகளும் காத்திருக்கின்றதை நாம் பலமுறை காணலாம். ஆப்ரிக்காவிலுள்ள பக்காளு ஜாதியார் அந்நாட்டிலுள்ள ஒரு வகையான பெருந்தவளை கத்துவதைக்கேட்டு, இடியும் பெருமழையும் வருமெனத்துணிந்து, அவற்றிற்குத் தப்பிப்பிழைக்கும்படி தங்களுக்கு வேண்டியனவற்றையெல்லா மெடுத்துக்கொண்டு பத்திரமான இடந் தேடிச் செல்வது வழக்கமென்று லிவிங்ஸ்டன் பண்டிதர் சொல்லுகிறார்.

அன்னப்பறவைகள் காற்றுக்கெதிராகப் பறந்தாலும், புறாக்கள் எப்பொழுதும்போலல்லாமல் முந்தித் தங்கள் கூட்டில்வந்தடைந்தாலும் புயல் வருமென்பதையறியலாம். உழவர்கள், கோழி மண்ணில் புரளுவதைக்கண்டு மழை வருமென்று சொல்லுவார்கள். எந்நாளுங் கோடையை அதிகமாக விரும்புகின்ற சுவர்க்கோழிக்குச் சுறு சுறுப்பும் துணிவுமுண்டானல் மழை வருவது நிச்சயமென்று நம்பலாம். ஆமைகள் காலையில் உற்சாகங்கொண்டு குந்துகாலால் நடந்து விரைவாகத் தங்கள் இரையையுண்டால் பொழுதுபடுமுன்னே மழை தப்பாமல் வருமென்பதற்கு அதுநல்ல அறிகுறியாகும.

அந்தந்தக்காலத்திற்கேற்றபடி கிரகநிலைகளை யறிந்து, மழை பெய்யுமென்றும் பெய்யாதென்றுஞ் சொல்வதும் நெடுங்காலப்பழக்கத்தினாலே யென்று நாம் காணலாம்.

உப்புக் கரைந்து ஜலமானாலும், பூனை நிலத்தைக் கீறினாலும், ஓணான் மரத்தின் உச்சியினின்று ஆகாயத்தை உற்றுப்பார்த்தாலும், பசுக்கள் அண்ணாந்து சூரியனைப்பார்த்தாலும், ஆடுகளுக்குப் பட்டியைவிட்டு வெளியேபோக விருப்பமில்லாதிருந்தாலும், நாய்கள் கூரைமேலேறி நின்றாலும், பாம்புகள் புல்லின்மேல் படுத்திருந்தாலும் மழைவருவது நிச்சயமென்று சொல்லலாம்.

ஒவ்வோர் வேளைகளிலே மாத்திரம் மேற்சொல்லிய குறிப்பின்படி மழை வாராதிருப்பதுமுண்டு. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இவ்வாறு வரப்போகிற காலவித்தியாசத்தை நன்றாயறிந்துகொள்ளும்படியான சக்தியிருப்பதினாலேதான் அவை பலவகையான கொடுமைக்குத் தப்புகின்றன. மனிதனுக்கு இவ்வாறான சக்தி கொஞ்சம். சில மிருகங்களுக்கு ஆகாயத்தின் பரமாணு வித்யாசத்தைக்கண்டறியத்தக்க பூர்ணமான சக்தியிருப்பதனால் ஆகாய தோலனயந்திரத்திலும் சிறப்புடையனவாகவே கடவுள் அவற்றைப் படைத்திருக்கிறார். (இது, "ஜநாநந்தினி" என்ற பத்திரிகையினின்று, சிலவிஷயங்கள் கூட்டியும் குறைத்தும், எடுக்கப்பட்டது.)

நல்லொழுக்கம்.

ஐந்தாவது அதிகாரம் - தைரியம்.

[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

(முற்றொடர்ச்சி.)

"அது மாலுமியின் திறத்தைக் காட்டுகிற சூறைக்காற்றுகமட்டும் அன்று. ஆனால் அது அக்கப்பற்றலைவனது தைரியத்தைச்சோதிக்கத்தக்க, போர்க்களமேயாக விருக்கின்றது. மனிதருடைய மிகவும் கஷ்டமான அபாய வேளையில் தான் அவர்களுடைய இயல்பை நாம், அறிய நேரிடுகிறது.— தானியல் (Daniel)

"நீ ஒரு மேன்மையான காரியத்தை உத்தேசித்து அது சித்தியாமளவும், அந்தப் போராட்டத்தில் இருதயத்தினின்றும இரத்தம் வடியினும், எவ்வளவு இடையூறு மேற்படினும் ஒருபோதும் தளரவிடாயேல், உண்மையான ஜீவனே! உன் காலம் வந்தெய்தும், மேல் நடத்து, உனக்குப் பரிசு கிடைக்கும். நீ உத்தேசப்பொருளை அடைவாய். - ஸி. மாக்கே. (C. Mackay)

"பெரும்பாலும், முன்னாளிலிருந்த வீரர்களின்நிதர்சனமானது ஒவ்வொரு பின் சந்ததியாருக்குப், தைரியத்திற்கு மூலமாக ஏற்படுகின்றது. மனிதர் முன்னைய வீரர்களின்பிரகாசத்தால் மேல் நடத்தப்பட்டு மிகவும் அபாயமான முயற்சிகளிலும், அமைதியுடன் செல்லுகின்றனர்.—ஹெல்ப்ஸ். (Helps.)

"காலத்தினாலும் விதிவசத்தாலும்நம்முடையே தகபலம்குன்றும்படி நாம் ஆக்கப்பட்டிருக்கின்றோம். ஆனால் நம்முடைய மனோபலமானது தளராது முயற்சி புரிந்து, துருவிக் கண்டுபிடிக்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றனம்.—டெனிசன் (Tennyson.)

இவ்வுலகமானது தைரியமுள்ள ஸ்திரி புருஷர்களுக்கு மிகவும் கடன்பட்டிருக்கின்றது. தைரியமெனின் தேகபலமென்பது நம்

கருத்தன்று. தேகபலத்தில் 'புல்டாக்' எனும் நாயானது மனித னுக்குச் சமானமாகலாம். ஆனால் அந்த நாயும், அதன் ஜாதியில் மிகவும் ஞானமுடையதாக மதிக்கப்படுகிறதில்லை.

மௌனமான ஊக்கத்திலும் முயற்சியிலும் விளங்குவதும், உண் மைக்காகவும் கடமைக்காகவும் எல்லாவற்றையும் சகித்து அனுப விக்கத்துணிவதுமாகிய தைரியமானது, கண்யங்களாலும் பட்டங்க ளாலும் அல்லது இரத்தத்தில் அமுங்கிய வெற்றிமாலைகளாலும் சம் மானிக்கக் கூடியதாகிய சரீரபலத்தின்செய்கைகளைவிட மிகவும் உண்மையானவீரம் பொருந்தியதாயிருக்கின்றது.

உண்மையை நாடிப்பேசவும், நியாயமாயிருக்கவும், யோக்கியமா யிருக்கவும், கெட்ட குணங்களை எதிர்க்கவும், தன் கடமையைச் செலுத்தவும் பொருந்திய தைரியமே, உயர்ந்த மனிதர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், இலட்சணமாகிய சன்மார்க்க தைரியமாயிருக்கின் றது. மனிதர்களும் ஸ்திரீகளும், இக்குணம் பொருந்தாதவரேல், மற்றெரு தர்மத்தையும் பாதுகாப்பதற்கான நம்பிக்கையில்லாத வர் ஆகிறுர்கள்.

மனிதர்களுடைய சரித்திரத்தில் தேர்ச்சியின் ஒவ்வொரு நிலை யும், தடைகள் கஷ்டங்களின் முன்னிலையிலுண்டாகித் தைரிய மும் பலமுமுள்ளவர்களாலும், முதன்மையான ஆலோசனையுள்ளவர் களாலும், மிகுந்த ஆராய்ச்சி உடையவர்களாலும், சுதேசாபிமானிக ளாலும் இவ்வுலகத்தின் சகல நடைகளிலுமுள்ள பெரிய வேலைக் காரர்களாலும், செய்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நிந்தை அவ தூறு ஹிம்சையன்றியே, எந்தப்பெரிய உண்மையாவது அல்லது சித்தாந்தமாவது வெகு ஜனங்களுடைய ஒப்புக்கொள்ளுதலுக்கு வந் ததில்லை. ஹெயின் (Heine) சொல்வதானது:—மகாத்மாக்கள், தங் கள் ஆலோசனையை வெளியிடுகிற இடத்திலெல்லாம் அதற்குக் குற் றங் கூறுவோரும் உளர் என்பதாம்.

"அநேகர் உண்மையை விரும்பி அதனைக் கண்டு பிடிப்பதற்கு பழைமையாய் மறைந்துகிடந்த புஸ்தகங்களை ஆராய்வதில் தங்கள் வாழ்நாளைச் செலவிட்டனர். கடைசியில் தங்கள் பிரயாசையின்பய

ளுக அதுஅவர்களுக்கு அளித்துச் சென்ற உருக்குச்சட்டையுடன் திருப்தியடைந்தனர். அநேகர் வருத்தத்துடனும், விசுவாசத்துடனும், உண்மையைத்தேடினர். அநேகர் அதற்காக மாறுகைவைத்துக்கொண்டு பெருமூச்செறிந்தனர். ஆனால் நம்சகோதரராகிய இவர்கள் அதற்காகச் சண்டையிட்டுத் தங்கள் உயிர் ஆபத்துடன் வேலை செய்தனர். அவ்வுண்மையின் திவ்யபூரணத்துவத்தின் அற்பநேர இன்பத்தை அனுபவித்துக்கொண்டு, அவ்வுண்மைக்காக, தங்கள் உயிரைக் கொடுக்குமளவிற்கு அதனை நேசித்தனர். (James Russell Lowell.)

சோக்ரேடி (Socrates) ஸுடைய உயர்ந்த போதனையானது அக்காலத்துக்கொள்கைக்கும், கட்சி சுபாவத்திற்கும் மாறுபட்டிருந்ததால், அவர் எழுபத்திரண்டாம் வயதில், ஏதன்ஸ் (Athens) பட்டணத்தில் விஷரஸத்தைப் பானஞ்செய்யும்படி கற்பிக்கப்பட்டனர். இராஜ்யத்தில் கௌரவம் பெற்றிருந்த தேவதைகளைத் தூஷிக்கும்படி ஏதென்ஸ் (Athens) நகரத்து வாலிபர்களை எழுப்பிவிட்டு அவர்களை அவர் கெடுத்துவிட்டதாக அவரைக்குற்றஞ் சாட்டினர்கள். அவர் தமக்குத் தீர்ப்புச்செய்த நியாயாதிபதிகளின் கொடுமையை மட்டுமன்று, அவருடையகொள்கையை அறியக்கூடாத பாமரஜனக் கூட்டத்தின் கொடுமையையும், தைரியமாய் எதிர்ப்பதற்கான சந்மார்க்க தைரியத்தை உடையவராயிருந்தார். ஆன்மாவின் அழிவின்மையைப்பற்றி விவகரித்துக்கொண்டே அவர் இறந்தனர். அந்த நியாயாதிபதிகளிடம், அவர் சொன்ன கடைசி மொழிகள் வருமாறு:—
"நாம் பிரிவதற்கு இதுவே சமயம், இப்போது நான் சாகவும் நீங்கள் வாழவும் போகிறீர்கள், ஆனால் யாருடையது நல்விதியோ, கடவுள் நீங்கலாக மற்றனைவருக்கும் தெரியக்கூடவில்லை."

மதவிஷயமாய் எத்தனையோ பெரிய மனிதரும், ஆலோசனையாளரும், இம்சைப்படுத்தப் பட்டிருக்கின்றனர், நல்லமாதிரியும். ஆனால் அக்காலத்திற்கு பொய்மையுமான தத்துவநூலை வெளிப்படுத்தினபடியால், புருனோ (Bruno) என்பவர் ரோம் (Rome) ல் உயிரோடு கொளுத்தப்பட்டனர். விசாரணை செய்த நீதிபதிகள், அவருக்கு மரணத்தீர்ப்புச் சொல்லுகையில் "உங்கள் தீர்ப்பை நான் ஏற்

றுக்கொள்வதிற் பயப்படுவதினும், நீங்கள் அத்தீர்ப்பை உச்சரிக்க அதிகமாய்ப் பயப்படுகின்றீர்கள்'' என்று அவர் கௌரவமாய்ப் பேசினர்.

அவருக்குப் பின்னர் கலீலியோ (Galileo) என்பவர் வந்தார். சாஸ்திரியென்னும் அவருடைய யோக்யதையைவிட திடவைராக்கியரெனும் யோக்கியதையே அவரிடம் விசேடமாக விளங்கிற்று. பூமியின் ஓட்டத்தைப்பற்றி அவர் செய்த போதனையினிமித்தம், பிரசங்கஸ்தலத்தினின்றும் குருக்கள்மாரால் குற்றஞ் சுமத்தப்பட்டு அவருடைய எழுபதாம் வயதில் அவருடைய விரோதக்கொள்கைக்கு பிரத்யுத்தரம் சொல்லுமாறு ரோம், (Rome) பட்டணத்திற்கு அவர் அழைக்கப்பட்டார். உள்ளபடியே அவரை அந்த இடத்தில் இம்சை செய்யாதேபோனாலும், விசாரணைக் காலத்தில் சிறைவைக்கப்பட்டிருந்தனர். போப் என்னும் தலைமைக்குருக்களானவர், அவர் இறந்தபின்னரும், அவருக்குக்கல்லறை கொடாமல் அவரைத்துன்பப்படுத்தினர்.

பிரான்ஸிஸ்கென் (Franciscean) சந்நியாசியாகிய ரோஜர் பேக்கன் (Roger Bacon) என்பவன், பிரகிருதி தத்துவ சாஸ்திரம் வாசித்ததினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டு, ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி செய்ததினிமித்தம், மந்திரவித்தை நடத்தினதாகக்குற்றம் சாட்டப்பட்டான். அவனுடைய கிரந்தங்கள் விலக்கப்பட்டன; அவன் சிறையிற் போடப்பட்டு, ஒன்றின்பின்னொன்றாய் நாலு 'போப்பு' களின் காலங்களாக பத்து வருஷம் சிறையிலிருந்தான். அவன் சிறையிலிறந்ததாகவும், உண்மையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்திலிருந்த தத்வ ஆலோசனையாளராகிய, ஆக்ஹாம் (Ockham) என்பவர், போப்பினால் விலக்கப்பட்டு மியூனிச் (Munich) சில் ஓடிப்போய் இறந்தனர். அங்கே அக்காலத்து ஜர்மன் சக்கரவர்த்தியின் சிநேகத்தால் காக்கப்பட்டிருந்தார்.

மனிதனுக்கு ஆகாயமண்டலங்களை வெளிப்படுத்தினதற்காக, புரூனோ (Brono) கலீலியோ (Galileo) ஆகிய இவர்களை முன்னர்ச் சுட்டுப்பங்கப்படுத்தினதுபோல் மனிதனை மனிதனுக்கு வெளிப்படுத்தினதற்காக, விசாலியஸ் (Vesalius) ஸை விசாரணை செய்து, மாறு

கொள்கையன் எனச்சுட்டுப் பங்கப்படுத்தினர். விசாலியஸ் (Vesalius) என்பவர் மனிதரின் உடலை உள்ளபடியே பிரிந்துப்பார்த்து, அதன் சொரூபத்தைக் கற்கும்படியான தைரியத்தை உடைத்தாயிருந்தார். அதுவரை அவ்வழக்கமானது ஏறக்குறைய விலக்கப்பட்டிருந்தது. அவர் ஒரு சாஸ்திரத்திற்கு அஸ்திவாரம் போட்டார். ஆனால் அதற்காகத்தன் உயிரைக்கொடுத்தார். அவரை விசாரணைபண்ணி அவருக்கு விதித்த மரண தண்டனையானது, ஸ்பேனிஸ் (Spanish) அரசன் இடைப்பட்டதால் பரிசுத்த ஸ்தலத்திற்குத் தீர்த்த யாத்திரை செய்வித்தலாக மாற்றப்பட்டது. திரும்பவரும்பொழுதும், நல்ல வாலிபவயதில் இருந்தார். ஸேண்ட் (Zante) டில் காய்ச்சலாலும். தரித்திரத்தாலும் துன்பத்துடனிறந்தார். சாஸ்திரத்தை விரும்பினதற்காக அவர் உயிர் கொடுத்தவர்.

நோவம் ஆர்கேனன் (Novum Organon) வெளிப்பட்ட பொழுது இராஜாங்கத்தைமாற்றவும் மதத்தின் அதிகாரத்தைமாற்றவும், அபாயகரமான கலகங்களை உண்டாக்குகிற தன்மை அதற்கு இருந்ததால் அதன்மேல் வெறுப்பான ஆக்ஷேபணை உண்டாயிற்று. மற்றப்படி மறந்திருக்கக் கூடிய பெயரையுடைய டாக்டர் ஹென்றிஸ்டியூப் (Dr. Henry Stubbe) என்பவரொருவர் ஆராய்ச்சிசெய்து சோதனை செய்கிற ஜாதிமுழுவதையும் "பேக்கன் - பேஸ்டு - ஜெனரேஷன்" (Bacon-faced-generation) என்று குற்றஞ் சாட்டி, அப்புதிய தத்துவசாஸ்திரத்திற்கு விரோதமாய் ஓர் புஸ்தகத்தையெழுதினர். ஆராய்ச்சிசெய்கிற தத்வசாஸ்திரமானது கிறிஸ்தவநம்பிக்கையை மாற்றுகிறதென்னும் நியாயத்தின்பேரில் ராயல் சொஸைட்டி (Royal Society) என்கிற சங்கத்திற்குங்கூட விரோதமுண்டாயிற்று.

காப்பர் நிக்க (Copernicus) வின் அனுசாரிகள் தெய்வ நம்பிக்கையற்றவர்களாகத் துன்பப்படுத்தப்பட்ட பொழுது கெப்லர் (Kepler) என்பவர் கடவுளுடைய வார்த்தைக்கு ஒற்றுமையானதாகத் தனக்குத்தோற்றுகிற கட்சியை அனுசரிப்பதாகச்சொன்னபடியால் மதவிரோதஞ் செய்வதற்குரிய அவமானக்குறியால் சூடுபோடப்பட்டார். பிஷப்பர்நட் (Bishop Burnet) என்பவர், தானறிந்த

மட்டில், மிகவும் பரிசுத்தமான ஆன்மாவை உடையராயிருந்த தாகச்சொல்லப்பட்டவரும் தூய்மையும் தீங்கின்மையுமான மனசுடையவருமாகிய நியூட்டன் (Newten) என்பவரைமனசின்பரிசுத்த விஷயத்தில் மிகவும் சிசுத்தன்மை பொருந்தினவர் என்றனர். அந்த நியூட்ட (Newton) னும் கூட பூகவர்ச்சிப்பிரமாணத்தின் சிறந்த உண்மையைக் கண்டுபிடித்ததால், தேவதைகளைக் கீழ்ப்படுத்தினதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். இடியினுடைய சுபாவத்தை விளக்கினதற்காக பிராங்கிளின் (Franklin) பேரில் இதேவிதமான குற்றச்சாட்டு உண்டாக்கப்பட்டது.

ஸ்பினோஸா (Spinoza) என்பவர் மதத்திற்கு மாறுபட்டதாய் எண்ணப்பட்ட அவருடைய தத்வசாஸ்திரக்கருத்துகளின்நிமித்தம் அவரைச்சேர்ந்த யூதர்களால் தீத் தண்ணீர் விலக்கிவைக்கப்பட்டனர். அதேகாரணத்திற்காகப் பிற்காலத்தில் அவரைக்கொலை செய்யவும் எத்தனப்பட்டார்கள். அவர் சடைசியாய், பிறர் சார்பின்றித்தைரியமாயிருந்து தரித்திரத்தோடு மாண்டு மறைந்தனர்.

டெஸ்கார்ட் (Descartes) னுடைய தத்வசாஸ்திரமானது மதத்தைக்கெடுக்க வழிகாட்டுவதாகக்குறைகூறப்பட்டது. லாக் என்பவரின் சித்தாந்தங்கள், அணுவாதமாகிய நிரீசுவரவாதத்தை உண்டாக்குவதாகச் சொல்லப்பட்டன. தற்காலத்திலுள்ள 'டாக்டர் பக்லென்' (Dr. Buckland) 'மிஸ்டர் ஸெட்ஜாவிக்' (Mr. Sedgewick) கும் மற்றும் பிரதானமான பூமிதத்வஸ்திரிகளும் பூமியின் சுவரூபத்தையும் சரித்திரத்தையும் பற்றி பைபில் (Bible) என்னும் வேதத்திற் சொன்னதை அடியோடு தொலைப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்கள். உள்ளபடியே வானசாஸ்திரமோ, ஸ்தாவரஜங்கம சாஸ்திரமோ, ஜடதத்துவசாஸ்திரமோ இவைகளைக்கண்டுபிடித்ததெல்லாம் தெய்வநம்பிக்கையைக் கெடுப்பதாக, மூடபக்தியும் சுருங்கிய விசாரணையுமுடையவர்களால், ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கின்றது.

பெரிதானவற்றை ஆராய்ந்துணரும் ஏனையரும், மதமற்றவரெனக் குறைக்கப்பட்டிலரெனினும் தங்கள் உத்தியோக முறைமையிலும், பொதுச்சங்கதி விஷயத்திலும், குறைந்த தூஷணையையுடைத்தானவரல்லர். டாக்டர் ஹார்வி (Dr. Harvey) என்பவர், இரத்தத்

தின் சுற்றோட்டத்தைப்பற்றிய தம்கொள்கையை வெளிப்படுத்தின பொழுது, அவருடைய வைத்திய பிரவிர்த்தியின் வரும்படி குறைந்து, வைத்தியத்தொழிலில் மூடனென்னும் அவமானத்தை அடைவாராயினர். "என்னாற் செய்யப்படக்கூடிய சில நல்லகாரியங்களும், மிகவும் கஷ்டத்துடன் நிறைவேற்றப்பட்டது. அதற்கும் மிகுந்த விரோதம் உண்டாயிருந்தது" என்று ஜான்ஹண்டர் (John Hunter) என்பவர் சொன்னார். ஸர் சார்லஸ்பெல் (Sir Charles Bell) என்பவர் சரீரதத்துவ சாஸ்திரவிஷயமான ஆராய்ச்சிகளில் மிகவும் பெரிதாகக்கிளர்ந்த இரத்த நாம்பின் ஒழுங்கை முக்கியமாய்ப் பரிசோதித்துக்கொண்டிருக்கையில் "நான் எளியவனாக இல்லாமலும், பிறரால் துன்பங்கள் அடையாமலும் இருந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமுள்ளவனாயிருந்திருப்பேன்" என்று ஓர் இஷ்டனுக்கு எழுதினார். ஆனால் அவர்கண்டுபிடித்த ஒவ்வொருபாகத்தையும் வெளிப்படுத்திவரவே அவரது ஜீவனமுயற்சி பிரத்தியக்ஷமாய்ச் சுருங்கிவிட்டது.

இவ்வாறு ஆகாயமண்டலங்களையும், பூமியையும், மனிதரையும் பற்றி நன்குணர்தற்குச்சாதனமாயிருந்த அறிவின் வளர்ச்சியானது ஏறக்குறைய ஒவ்வொன்றும், முற்காலத்திலிருந்த மிக்க ஊக்கமுள்ளவர்களின் ஊக்கம், பற்றுதல், தன்வருத்தம் பாராமை, தைரியமாகிய இவற்றால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள், தங்களுடன் அக்காலத்தில்வசித்தவர்களால் எதிர்த்து தூஷிக்கப்பட்டிருந்த போதிலும், தற்காலம் மனிதஜாதியாரில் தேர்ந்த அறிஞர்கள் கனப்படுத்துவதற்கு மிகவும் விரும்புகிறவருக்குள் விளக்கமுற்றிருக்கின்றனர்.

முற்காலத்தில் சாஸ்திரக்ஞர்களை அநீதியான கொடுமையுடன் நடத்தினதானது, தற்காலம் அதன்பயனை அறிவியாமலிருக்கவில்லை. அது நமது கொள்கைக்கு மாறுபட்டவர்கள் பொறுமையுடன் கவனித்து, உண்மையுடன் யோசித்து அவர்கள் புத்திக்குப் புலப்பட்டவற்றை பஹிரங்கமாயும் உண்மையுடனும் சொல்லுகிறதானால், அவர்கள் விஷயத்தில் நாம் பொறுத்துக் கொண்டிருக்கும்படி நமக்குக் கற்பிக்கின்றது. உலகமானது மனிதஜாதிக்கு கடவுள் அருளிய புத்தகமாயிருக்கிறதென்பதும், அதன் யதார்த்தப்பொருள்

விளங்கும்படி வாசித்தறிந்தால், ஒழுங்குபட்டவர்களுடைய மனதில் அக்கடவுளின்வல்லமையைப்பற்றி அதிகமாய் ஆழ்ந்த உணர்ச்சியும், அவருடைய ஞானத்தைப்பற்றிய மிகவும் தெளிவான உணர்ச்சியும், அவருடைய நன்மையைப்பற்றிய மிகவும் நன்றியறிவுள்ள ஞானமும் பதியும்படி செய்வதையின்றி வேறுபயனளிக்க முடியாது, என்பதும், பிளாட்டோ (Plato) வினுடைய விசேஷ அபிப்பிராயமாயிருந்தது.

சாஸ்திர உண்மைகளுக்காக உயிரைக்கொடுத்தவர்களின் தைரியமானது, இப்படியிருக்க; தெய்வ விசுவாசத்திற்காக உயிரை உதவியவர்களின் தைரியம் குறைந்த மகிமையை உடையதன்று. மனச்சாக்ஷியின் பொருட்டுத்தனித்திருந்து தைரியம்சொல்வதற்கு உருக்கமுள்ள ஒருவன்கூடவின்றி கஷ்டப்பட்டுசகிக்க ஆயத்தமாயுள்ளவராய்க்காணப்படுகிற, ஓர் புருஷனுடைய அல்லது ஓர் ஸ்திரீயினுடைய பொறுமையுள்ள சகிப்பானது—யுத்தகளத்திற் காட்டப்படுகிறதைவிட மிகவும் உயர்ந்த தைரியத்தைக் காட்டுகின்றது. ஏனெனிற் போர்க்களத்திலோ மிகவும் பலஹீனனுக்குங் கூட, அனேகருடைய உருக்கம், வல்லமையாகிய இவற்றின் ஊக்கத்தினாலே தைரியமும் உற்சாகமும் உண்டாகின்றன. ஒழுக்கத்தில் அபிமானம் பூண்டதால், கஷ்டங்கள் அபாயங்கள் துன்பங்களாகிய இவற்றை அனுபவித்து, நீதியாயிருத்தலைக்கைக்கொண்டு, உலகத்தின் சன்மார்க்கயுத்தத்தில் வீரனென்னும் பட்டம் பெற்று, உண்மை விஷயத்தில்தங்கள் மனதிற்பட்டதற்கு அங்கமாய் நடப்பதினும் தங்கள் உயிரை விட்டுவிடுதலே, திருப்தியாகக் கொண்டவர்களின் அழிவில்லாத நாமங்களைப்பற்றிக் காலமானது சொல்லச் சக்தியுடையதன்று. (அதாவது நாமங்கள் காலாதீதப்பட்டு நிற்கும்.)

இம்மாதிரியான மனிதர்கள், கடமையைப்பற்றிய சிறந்த ஞானத்தால் தூண்டப்பட்டு, பூர்வகாலங்களில், ஒழுக்கத்தை அதனுடைய மிகவும் வீரமான நிலைமையிற் காட்டிக்கொண்டு, இன்றும் சரித்திரங்களில் மிகவும் கௌரவமான காட்சியை நமக்குக்கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். மனிதர்களுக்குச் சமமாகவே, உருக்

களும் மிருதுவும் நிறைந்த ஸ்திரீகளுங்கூட இந்த விஷயத்திற் குறையாமல், மிகுந்த தைரியத்தைக் காட்டத் தகுதியுடையவராயிருந்திருக்கின்றனர். அதற்குத் திருஷ்டாந்தமாக அன்னி ஆஸ்கியூ (Anue Askew) வை எடுப்போம். அவள், தன் எலும்புகள் பிரிபடும் வரை அரைக்கப்பட்ட பொழுதும், ஒரு கூச்சற் போடவில்லை; சரீரத்தின் ஓர் உறுப்பையும் அசைக்கவில்லை. தன்னை இம்சிப்பவர்களை அமைதியுடன் முகத்தில்நோக்கித் தன்செய்கை தப்பென்று ஒப்புக்கொள்ளவாவது, அல்லது தன் கொள்கையை மறுத்துக்கூறவாவது மாட்டேனென்றனள். லேட்டிமர (Latimer) ரையும், ரிட்லி (Ridley) யையும் நிதர்சனமாக வைப்போம். அவர்கள் தங்கள் கஷ்டமான துரதிருஷ்டத்திற்குத் தூக்கப்பட்டு, மார்பில் அடித்துக்கொள்ளாமல், ஒருவர் மற்றொருவரைப்பார்த்து, "நன்றாய்ச் சௌக்கியமாயிரு; ஏனெனில் ஒருக்காலும் அணைந்துபோகாத தீபத்தைக் கடவுள் கிருபையால் இன்று இங்கிலாந்திற் பொருத்தி வைப்போம்" என்று சொல்லிக்கொண்டு, தேவபீடத்துக்குக் கலியாண மாப்பிள்ளை போவதுபோல சந்தோஷமாய்த் தங்கள் மரண ஸ்தலத்திற்குச் சென்றனர். அல்லது ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்ததற்காகப் புதிய இங்கிலாந்தின் பியூரிட்டன்ஸ் (Puritans) என்னும் மதத்தரால்தூக்கிற்,போடப்பட்ட போலிவைத்தியஸ்திரீயாகிய மேரிடைய (Mary Dyer) ருடைய திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்வோம். அவள் மனப்பூர்வமாய்த் தூக்குமரத்தில் ஏறித்தன்னைச்சுற்றி நின்றவர்களுக்கு அமைதியுடன், பிரசங்கம் செய்து தன்னை, இம்சிப்பவர்கள் வசம், தானே ஒப்புவித்து சாந்தத்துடனும் சந்தோஷத்துடனும், உயிரை விட்டனள்.

(இன்னும் வரும்.)

பிழைதிருத்தம்:—சென்றபகுதி கரு௦-ஆம் பக்கம், ச-ஆம் வரியில், "உழைக்காவிட்டால்" என்பதை "உழைக்கவிட்டால்" எனவும்; பக்-ருடு, வரி கரு-ல், "மிகுந்த..ப்தலை" என்பது "மிகுந்த உராய்தலை" எனவும் திருத்திக்கொள்க.

நுண்பொருண்மாலை.

(முற்றெடர்ச்சி.)

வான்சிறப்பு.

கக. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

பரி - உரை:—மழையிடையமுது........... என்றார்.

நுண் - மாலை:—நிற்ப என்பது பிறவினையாதலின் நின்றெனத் திரிந்து நின்றது.

கஉ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

பரி - உரை:—உண்பார்க்கு......என்பதாம்.

நுண் - மாலை:—முடிபுயர்திணையாயினும் அஃறிணைக்கும் ஒக்கும்; "வலியார்முற்றன்னை நினைக்க" (உ௫௦)* "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி" யும் (௩௦௬) அது. இஃது, ஒரு பாற்கிளவி ஏனைப்பாற்கண்ணும் வருமென்னும் விதிபெற்ற பொருளாற்றல்.

கச. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

பரி - உரை:—உழவர் ...... காரணங் கூறியவாறு.

நுண் - மாலை:—வாரி - வருவாய்; "வாரி பெருக்கி" (௫௧௨) என்பதும் அது. "குன்றிக்கால்" என்பது இன்னொலியாதல் செய்யுட்டொடையாதல் காரணமாக யகரங்குறைந்து நின்றது.

---

* "மெலியாரெனச் சிறப்புடைய உயர்திணைமேற் கூறினாராயினும் ஏனையஃறிணையுங் கொள்ளப்படும்" எனவும், "சேர்ந்தாரை என உயர்திணைப்பன்மைமேல்வைத்து, ஏனை நான்குபாலுந் தம் கருதியொடு கூடிய, பொருளாற்றலாற் கொண்டார்" எனவும் உரைத்தார் பரிமேலழகர்.

கரு. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

பரி - உரை:—பூமியின் கண் ...... கூறியவாறு.

நுண் - மாலை:—மற்று - வினைமாற்று; "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது" (நகூஉ), "மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை" (கூகூஅ) என்னும் இரண்டுபாட்டினும், மற்று என்பதனை வினைமாற்றாகக்கோடல் அரிதாகலின், ஆண்டு விரித்தார்.* ஆங்கு-மறுதலைத்தொழிலுவமச்சொல். 'எல்லாம்' என்றார், கெடுத்தல் எடுத்தல் பலவாதல் நோக்கி. "இயற்றலுமீட்டலுங் காத்தலும்" (நஅரு) என்பதுபோலப் பொருள்பெற்று 'வல்லது' என்னுஞ் சொற்பெருமையின் 'வல்லதென்பது அவாய்நிலையான்வந்தது' என்றார்; வருவித்ததென்னும் ஏவுதற்கருத்தாவின்றொழிலை இயற்றுதற்கருத்தாவின்றொழிலாகச்சுருக்கி எழுதினர்; முன்னர் 'அவாய்நிலையான் வருவித்தது' எனஎழுதுவதுங்காண்க;* அவாவிநிற்பது, செய்யுட்கணின்ற 'எல்லாம்' என்னுஞ்சொல்; அவாவப்படுவது—இவ்வுரையாசிரியர் வல்லதென வருவித் தெழுதியது; அஃது, "உடைத்தம் வலியறியார்" (சஎஉ) "நகைவகைய ராகிய காரணம்" (அகஎ) என்பவற்றுள் விரிக்கப்படுதல் காண்க.* அவாய்நிலை தகுதி அண்மைநிலை என்னும் மூன்றினும் ஒருசொல்லோடு ஒருசொற்புணர்ந்துநிற்கும். இனி, தொகைநிலை வினைநிலை எண்ணுநிலையானும் புணருமென்பர். யானைக்கோடு என்பது இவைமூன்றுந் தோன்றப் புணர்ந்தது; முயற்கோடு, ஆமைமயிர்க்கம்பலம், துன்னூசிக்குடர் என்பன- அவாய்நிலை தகுதிகளையொழித்துப் புணர்ந்தன. வல்லமெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல்யானைப் பெருவழுதி—இஃது, அண்மைநிலையொழித்

---

* ஈண்டுக் கெடுப்பதென்னும் வினையை மற்று என்பது நேரேமாற்றி நின்றாற் போல, இக்குறள்களில் மாற்றாமை உரையான் உய்த்துணர்ந்து கொள்க.

* அவாய் நிலையான்வந்தது, அவாய் நிலையான் வருவிக்கப்பட்டது என எழுதிச்செல்வர் என்பதுகுறிப்பு.

* "உடைய என்பது அவாய்நின்றமையின் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது" எனவும், "பகைவரால் என்பது அவாய்நிற்றலின் வருவன என்பது வருவிக்கப்பட்டது" எனவும் முறையேவிரித்தார்.

துச் சேய்மைநிலையாய்ப்புணர்ந்தது; பொருள்கோள்வகையும் மாட்டுறுப்பும் அது. இனி, 'வனைந்தான்' என்பது—கருவியையுஞ் செயப்படுபொருளையும் கருத்தாவையும் இன்னதற்கிதுபயனாக என்பதனையும் அவாய்நின்றது என்றார் "அதுச்சொல்வேற்றுமை" என்னுஞ்சூத்திரத்துள் நச்சினார்க்கினியர்முதலாயினார் என்க. ஆதலால் இவ்வுரையாசிரியர், தோன்றாவெழுவாயும் வினைமுற்றும் வினையெச்சமும் கருவியும் செயப்படுபொருளுமுதலாகிய பலசொற்களையும் வருவிக்குமிடத்தும் அவாய்நிலையான் வந்ததென்பர். 'இதுசொல்லெச்சம்† இது தோன்றாவெழுவாய்' என்பனவும் அவாய்நிலைக்குப் பரியாயமென்க. இனி "கெட்டார்க்குச் சார்வா" யென நான்கனுருபினும் (சார்ச்சி) வந்தது, புறனடையானாக இலேசானாகஅமைக்க; "இறைவனைச் சாரார் செவியோரார்" என(௭௦) ஆசாரக்கோவையில் (சார்பு) மெய்யுறுக்கண்ணும் வந்தது. "கரும மில்லாச் சார்பென் கிளவிக்கு"(தொல்-சொல்-௮௬)எல்லாவுரைகாரரும், "அல்லாச்சார்" பெனப்பாடமோதி அதற்குரை— கருமமில் சார்பென்றும், கருமமில் சார்பாவது மெய்யுறாச்சார்பென்றும், அதற்குதாரணம் அரசர்கட்சார்ந்தானென்றும், தூணைச்சார்ந்தானென்னும் மெய்யுறுசார்பைக் கருமச்சார்பென்றும் நியமித்தார். சார்பு இரண்டன் முடிபாயினும் ஏழொடும் மயங்கும் என்பார், "உரிமையுமுடைத்தே கண்ணென் வேற்றுமை" என்றார். கருமம் என்பது வடமொழியில் இரண்டாம் வேற்றுமைக்கொருபெயர்.

௧௬. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

பரி - உரை:— மேகத்திற்றுளி...... இல்லையென்பதாம்.

நுண் - மாலை:— 'புற்றலையும்' என்றெழுதிச் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கதென்றார்; விகாரத்தாற்றொக்க தென்பது— "இருபெயர் பலபெயர் அளவின் பெயரே, யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி, யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங், கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே" (தொல்-சொல் - ௪௪௭)

* ௧௦, ௯௭, ௫௭, ௧௭௧, ௧௮௮, ௫௭௨, ௧௦௯, என்னுந் திருக்குறள்களினுரையிற்காண்க.

இவ்வாறு மன்றிவரும் உம்மைகள் தொக்குநிற்பதனை எங்க. 'காண்பரிது' என்பது சால்புபடும் என்பதுபோலச் செய்புவினையெச்சந் திரிந்தது; அன்றியும் "நுண்பொருள் காண்பதறிவு" (௪உ௪) என்பது போல நில்லாமையிற் காண்பரிது என்பது விகாரம்; "அள்ளிக் கொள் வற்றும்" (௧௧௮௭) அது. ஆங்கு - அப்பொழுது.

௧௭. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்

பரி - உரை:— அளவில்லாதகடலும்...... கூறப்பட்டது.

நுண் - மாலை:— 'தடிந்து' என்பது குறைத்தலின் பரியாயமாய் முகத்தற் பொருட்டாயிற்று; அதற்குச் சொற்சோதனை காட்டிய "கடல்குறை படுத்தநீர் கல்குறை படவெறிந்து" என்னும் பரிபாட்டும் அது *; கல் - இமையம். தடிந்து-மின் என்னுது, காரணமாகிய கடற்கும் காரியமாகிய மேகம் இன்றியமையாச் சிறப்பென்பார் இவ்வாறு உரையிட்டார்.

௧௮. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

பரி - உரை:— தேவர்கட்கும்...... மூற்கூறினர்.

நுண் - மாலை:— சிறப்பொடுகூடிய பூசனையென ஒருமையாக்கிச் "செல்லாது" என்றார்; 'ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான்' என்பதுமது. வானோர்க்கும் என்பதனுற் சிறப்பும்மை.

௧௯. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

பரி - உரை:—அகன்றவுலகின்கண்......நின்றன.

நுண் - மாலை:—தானம்—அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவந்துகொடுத்தல். தவம்-மனம் பொறிவழிபோகாமை நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல். தானந் தவமிரண்

---

* அச்சுப்பிரதிகளில் "கடல்குறை படுத்தநீர்" "கடல்குறை படவெறிந்து" எனக்காணப்படும் பிழை, இதனுல் திருத்திக்கொள்ளத் தக்கது.

டும் எனச் செவ்வெண்டொகை பெற்றது; இவ்வாறில்லாமையான் "அறம் பொருள் கண்டார்கணில்" என்பதனுட் (கசக) செவ்வெண் ணின்றொகை தொக்கு நின்றது என்றார். "திருவளர் தாமரை" யுட் பேராசிரியர் இவ்வாறு உரைத்தார் என்க. "அவற்றின் வரூஉ மெ ண்ணி னிறுதியும், பெயர்க்குரி மரபிற் செவ்வெ ணிறுதியும், ஏயி னாகிய வெண்ணி னிறுதியும், யாவயின் வரினுந் தொகையின் றியலா" (தொல் - சொல் - உகூ0) என்பது சூத்திரம்.

உ0. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

பரி - உரை:— எவ்வகை......கூறப்பட்டது.

நுண் - மாலை:— இன்றியென்னும் வினையெச்சக் குறிப்பு இன்றெனத் திரிந்தது. "உப்பின்று புற்கை" "அதா அன்று" என்பது மது; "இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி, நின்ற விகர மூகர மாதல்" என்னுஞ் சூத்திரவிதி பெற்றன. யார்க்கும் என்பது யார் யார்க்கும் என இரட்டித்தது.

நீத்தார் பெருமை.

உக ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

பரி - உரை:—தமக்குரிய...ஏற்றப்பட்டது.

நுண்-மாலை:—செய்தார் துணிவு பனுவன்மேல் ஏற்றப்பட்டது. யானெனது என்பது இருவகைப்பற்று.

உஉ துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

பரி - உரை:—இருவகைப்பற்றினையும்...நின்றது.

நுண்-மாலை:—கொண்டாலென்பது கொண்டெனத் திரிந்தது. அற்றென்னும் உவமைச்சொல் உயர்திணைக்கண் வாராது, அஃறிணைக்கண் செய்யுமென்னும் முற்றுப் போலுமென்றே நிற்கும்.

"இருமைவகைதெரிந்து"

நுண் - மாலை:—இருமை—"ஒருமை, எழுமை" (திருக்-கஉசு) போல் எண்ணப்படு பொருளாகாது, இரண்டின் வகை என எண் மாத்திரையாய் நின்று "சுவையொளி யூறோசை நாற்றமென்றைந்தின், வகைதெரிவான்" (ஷை-உஎ) என்னும்பொருள்பெற்றது. இதற்குச்சொற்சோதனைகாட்டிய 'தெரிமாண்டமிழ்மும்மைத்தென்னம்பொருப்பன், பரிமா நிரையிற் பரந்தன்று வையைய" என்னும் பரிபாட்டுப் போல், ஈண்டு எண்ணின்மேனின்றது; மையீறுபெற்ற எழுமை ஒருமைபோல் ஈண்டு எண்ணப்படுபொருண்மேனில்லாமை காண்க. "மூவர்நின்றேத்த" என்னுங் கோவையாருள் (நுநுஎ) "முப்பத்து மும்மைத்தேவ"ரும் அது. "பெருமையே" என்றதனால் பிரிநிலையேகாரஞ் செய்யுட்டொடை விகாரம். அறுவகைத் தொகையுள் ஏகாரத்தொகை யின்மையால் விகாரமென்றார். விகாரமெனினுஞ் செய்யுள்விகாரமெனினும் ஒக்கும்.

"உரனென்னுந் தோட்டியான்"

நுண் - மாலை:—வித்தென முளைத்த லொப்புமைபற்றி உருவகமாயிற்று. "வரைவிலா மாணிழையார்" என்னுங்குறளில், 'பூரியர்களாழுமளறு' என்பது மது. (கூககூ) மேல், இவ்வாறு வரும் உருவகமெல்லாம் விரித்தெழுதுவரெனக.

"ஐந்தவித்தானாற்றல்"

நுண்-மாலை:—"சாலுங்கரி" என்பதற்கு "மல்லன்மாஞாலங்கரி"* (திருக்-உசரு) என்பதற்கு உரைத்தாங்குரைக்க; "இரப்பிடும்பைதானேயுஞ்சாலுங்கரி"யும் (கoசுo) அது. முற்றும்மையுமெண்கணுருபும், செய்யுட்டொடையும் இன்னிசையுங் காரணமாகவந்த செய்யுள்விகாரத்தாற் றொக்கன; செய்யுள்விகாரமாவது, இன்னிசையும் பதத்துளடிப்பாடும் செய்யுட்டொடையும் நோக்கிவரும். "அந்நாற்சொல்லுந் தொகுக்குங் காலை" (தொல்-சொல்-சoநு) என்னுஞ் சூத்திரத்து அறுவகைவிகாரமும் தலைபிடைகடை குறைத்தலென்னும் மூவகை

* "சான்றுவார், தாம் கண்டுதேறிய பொருளைக் காணாதார்க்குத் தேற்றுதற்குரியவர்" என்பது.

*

விகாரமுமென்க. அது, தொல்காப்பியத்துள் நச்சினார்க்கினியருரையிற்காண்க. இனிப் புணர்ச்சிவிகாரமாவது, தோன்றல்திரிதல்கெடுதலென்க. "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" (தொல்-சொல்-௪௧௩) என்பது உருபிருந்தாங்கே தொகுவது. நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, நாகர்பலி,குன்றக்கூகை என்பன இவ்வாறும் நேரேதோன்றத் தொகாது: சாத்தனொடுவந்தான், சாத்தற்குக் கொடுத்தான் என்பன தொக்காற்றொகைப்பொருளுணர்த்தாது - எழுவாயும் பயனிலையாயும் நிற்கும்—இவ்வாறுரைத்தார் நச்சினார்க்கினியருமென்க. ஈண்டும் இன்னொலிகாரணமாக ஆற்றற்கென்பது தொக்குநின்று எழுவாய்போலநிற்றனோக்கி, வேற்றுமைத்தொகையுளடக்காது விகாரமென்றார். 'அறைபறைகண்ணார்' (திருக்-1180)என்பதும்* 'பொருள்கருவி காலம் வினையினொடைந்தும்"(ஷை-௯௭௫)என்பதனுள்'ஒடு'வும் அது. செய்யுட்டொடைகாரணமாக "உண்டார்கணல்லதடுநறா" (ஷை-௧0௯0) என்பதனுள் 'கண்டார் மகிழ்செய்த'லும் "தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை"யும் (ஷை-௫0௮) † எழுவாயும் பயனிலையுமாய் நிற்றனோக்கி, விகாரமென்றது ஆண்டுக்காண்க. "கம்பஞ் சிவந்த" என்னுங் கோவையாருள், "அரிசிந்து கண்ணாள், செம்பஞ்சியின் மிதிக்கிற் பதைக்கும்மலர்ச் சீறடி" (௨0௯) என்பதற்கு, 'தொகச்சொல்லாதவிடத்துத் தொக்குநின்ற'தென்றார் பேராசிரியருமென்க. செய்யுட்டொடை-தளைவிரவாமை. முற்றும்மையும் உம்மைத்தொகையுளடங்காதென்பது"இருபெயர் பலபெயர்" என்னுஞ் சூத்திரத்தால் அறிக. இனி இச்செய்யுட்கண் வேற்றுமையும் உம்மையும் உருபிருந்தாங்கே தொக்கன. 'தூதுரைப்பான்" (திருக் - ௯௮௧) வினையுரைப்பான், (௯௮௩)வழியுரைப்பான் (௯௮௮)—பண்பென இவற்றின்கண்ணும்

---

* அறைபறையாகிய கண்ணினையுடையார் எனப் பண்புத்தொகைப் பொருள்படக்கூறிச், செய்யுள்விகாரமாகக் குறிப்பிட்டார் பரிமேலழகர்.

†'கண்டார் மகிழ்செய்தல்' என்பதற்குக் கண்டார்மாட்டுமகிழ் செய்தலெனவும், 'தேரான் பிறனைத் தெளிந்தான்' என்பதற்குப் பிறனையாராயாது தெளிந்தவனுக்கு எனவும், முறையே, ஏழனுருபும் நான்கனுருபும் விகாரத்தாற் றொக்கதாக்கொண்டு பொருளுரைத்தார் பரிமேலழகர்.

"குடியாண்மையுள்வந்த குற்றம்(திருக்-௬௦௯)'பொருளாயம்'(௬௯௩) என இவற்றின்கண்ணும்* விகாரமென்னுமை முறையே காண்க.

(தொடரும்)

காலமளக்குங் கருவிகள்.

:o:

உலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட அருமையான பதார்த்தங்களும் நாம் நேரில் அடையாவிடினும் கண்கூடாகக் காணாவிடினும், ஒருவாறாக மனதில் ஊகித்தறிவதற்குச் சாத்தியமாயிருத்தல் கூடும். காலம் என்னும் பொருளிடத்து ஓர்விசித்திரமிருக்கின்றது அதை அறிவது மானிடமனோதத்துவ லக்ஷணத்துக்கு எட்டாதசெய்கையாயிருக்கிறது. உலகத்தில் ஒவ்வொரு பதார்த்தமும் ஓர் ஆதியையும் ஓர் அந்தத்தையும் உடையது. காலமோ ஓர் ஆதியையாவது அந்தத்தையாவது உடைத்தாயிருக்கிறதென்பதை மனதினால் நினைக்கவும் நமக்குச் சாத்தியமேயில்லை. இன்னசமயத்திற் காலமென்றபொருள் ஆரம்பித்தது,இன்னசமயத்தில் அது போய்முடியுமென்று நாம் ஒரு கணக்கிட்டுக் கூறுவோமாயின், அந்த சமயத்துக்குமுன் காலமில்லையோ? அந்த சமயத்துக்குப் பின் காலமிராதோ? என்னும் வினாவைச் சிறுகுழந்தையும் கேட்கும்; ஆகவே காலத்துக்கு ஆத்யந்தத்தை ஏற்படுத்துவது மானிட மனோதத்துவலட்சணத்துக்கு எவ்வளவும் இசையாததென்க. ஆத்யந்தமற்றதாய் என்றைக்குமுள்ளதான பொருளாகக் காலத்தை யூகித்துப்பார்ப்போமென்றால் அதுவும் மகா நுட்பபுத்தியுடையவனுடைய மனோதத்துவத்துக்கும் எட்டாதவிஷயமாயிருக்கிறது. இஃது என்னவிசித்திரம்! ஆத்யந்தமுள்ளதாகவும் ஆதியந்தம் அற்றதாகவுங்கருத மனோதத்துவத்துக்கு எட்டாத அருமையான லட்சணமுடைய பொருள் காலமொன்றுமட்டுமன்று;

---

*துறுதுரைப்பானுக்கு, வினையுரைப்பானுக்கு, வழியுரைப்பானது என வேற்றுமைத் தொகைகளாகவும், குடியுள்ளும் ஆண்மையுள்ளும்;பொருளும் பொருள்வருவாயும் என உம்மைத்தொகையாகவும் பொருள் கூறப்பட்டமை காண்க.

அதற்குத்துணை மற்றொன்றுண்டு: அது வெளிப்பரப்பு. மேற்காட்டிய லட்சணத்தைக் காலத்தைப்போலவே வெளிப்பரப்பென்னும் பொருளும் பெற்றிருக்கிறது. மனோதத்துவலட்சண சாஸ்திரத்தில் இவ்விரண்டுபொருள்களும் அதிவிசித்திரமானவைகளென்று கூறப்பட்டிருக்கின்றன. காலம் ஆதியந்த மற்ற பொருளாயிருக்கிறபடியினால், அதையே கடவுளென்றுகூறும் காலமதவாதிகள் என்னும் ஒருவிதசித்தாந்திகளும் உளர். அதுநிற்க,

மானிடர் உலகத்தில் பற்பலகாரியங்களில் பிரவிர்த்திப்பதற்குக் காலஅளவைகள் அத்தியாவசியகமாகவேண்டியிருக்கிறபடியினால் ஆதியிலேயே மனிதர்கள் தங்களுடைய கல்வி-ஆராய்ச்சி-புத்தி இவற்றிற்கேற்றபடி பற்பல் காலவளவைகளை ஏற்படுத்தியிருந்தார்கள். சூரியன் உதயமாவதையும் அஸ்தமிப்பதையும் வரையறைகளாக ஏற்படுத்தி ஜனங்கள் ஆதியில் நாட்களைக் கணக்கிட்டுவந்தார்கள். பிறகு ஒருநாளையிற் செய்துமுடிக்கவேண்டிய பற்பல வேலைகளுக்கு ஏற்ற பற்பல கால அளவைகளை ஏற்படுத்தவேண்டிய ஆவசியகம் நேரிட்டது. காலை - நண்பகல்-மாலை என்னும் மூன்று பிரிவுகள் தவிர வேறே காலவளவைகள் அவர்களுக்குத் தோற்றவில்லை. ஆராய்ச்சியினால் நாளடைவிலே புத்தி விசாலப்பட, பகற்காலத்திலே ஆகாயத்திற் கீழ்த்திசையிலிருந்து மேற்றிசைக்குச் சூரியன் இயங்கி வருவதற்கு ஏற்றபடி விருட்சங்கள் முதலியவற்றின் நிழல் நீளுவதையும் குறுகுவதையும் அவர்கள் கண்டபோது அதையே ஆதாரமாகக் கொண்டு சூரியநிழற்கடிகாரங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். இதை ஆதியில் உபயோகித்தவர் எகிப்து (ஈஜிப்ட்டு) தேசத்தவர்களென்று தோற்றுகிறது. கோடைகாலத்தில் பகற்காலப்பொழுது நீடித்தும் மாரிகாலத்தில் குறைந்துமிருக்கிற காரணத்தினாலும் மேகத்தினால் சூரியகிரணம் நன்றாகத்தோன்றாதபோது நிழல் தெரியாத காரணத்தினாலும் அச்சூரியநிழற் கடிகாரங்கள் பயனில வென்று ஜனங்கள் கண்டறிந்தார்கள். ஆயினும் வேறே வகையில்லாதபடியால் அம்மட்டில் அவர்கள் திருப்தியடையவேண்டியதாயிருந்தது. கிறிஸ்து பிறக்க 740- வருஷங்களுக்கு முன்னர் அரசாண்டு வந்த ஜூடாதேசத்து மன்னனுடைய சரித்திரத்தில் மேற்படிசூரிய

நிழற் கடிகாரத்தைக்குறித்து முதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பகற்காலத்தையும் இராக்காலத்தையும் பன்னிரண்டு சமபாகங்களாக ஏற்படுத்தியவர் முதல் முதன் பாபிலோனியா தேசத்தவர்கள். அவர்களிடத்திலிருந்து தான் ஏனையோர் அதைக் கற்றுக்கொண்டார்களாம். மேற்கண்டகாரணங்களினாலே சூரியநிழற் கடிகாரங்கள் தக்க கால அளவைக்கருவிகள் அல்லவென்று தெரிந்துகொண்ட பிறகு, ஜனங்கள் நீர்க்கடிகாரங்களை உண்டாக்கிக் கொண்டார்கள். ஒரு சிறு பாத்திரத்தில் தண்ணீர்வார்த்து அதை நன்றாகமூடி அதன் ஓர்புறத்தில் ஒருசிறு துவாரத்தை உண்டாக்கி அப்பாத்திரத்தை மேலும், தண்ணீர் இல்லாத அதேமாதிரியான மற்றொரு பாத்திரத்தைக் கீழுமாகவைத்து, அந்தச்சிறுதுவாரத்தின் மூலமாகத்தண்ணீர் இறங்குவதற்குப் பிடிக்கும் நேரத்தைக்கொண்டே காலஅளவைக் கணக்கிட்டுவந்தார்கள். இதைக்கண்ட மற்றுஞ்சிலர் ஓர் பாத்திரம் நிறையத் தண்ணீர் வார்த்து அதில் வேறொரு வெறும் பாத்திரத்துக்குச் சிறுதுவாரம்செய்து அதை அத்தண்ணீரில் அமிழ்த்தி அந்தத்துவாரத்தின் வழியாக அவ்வெறும் பாத்திரத்தில் தண்ணீர் ஏறுவதற்குப்பிடிக்கும் காலத்தைக்கொண்டு மணிநேரங்களைக் கணக்கிட்டுவந்தார்கள். கிறிஸ்துபிறந்த சில வருஷங்களுக்குப்பின்பும்இந்த நீர்க்கடிகாரங்களே உபயோகப்பட்டுவந்தன. அக்காலத்தில் ஜனங்கள் சூரியோதயகாலத்தை ஒருமணியென்று நிர்ணயித்து அங்கிருந்து இரண்டு மூன்று நான்கென்று கணக்கிட்டு வந்தார்கள். உலகமுழுவதும் தனியரசுபுரிந்து வந்த உரோமாபுரி அரசர்களும் அக்காலத்தில் நீர்க்கடிகாரங்களைத்தான் உபயோகித்துவந்தார்கள். இது முற்காலத்து நம் நாட்டாராலும் வழங்கப்பட்டது. இலக்கியங்களில் இது, "குறுநீர்க்கன்னல்" "நாழிகை வட்டில்" என்று கூறப்படும். இதனை "பழவிறன் மூதூர் பாயல்கொ ளடுநாட், கோமகன் கோயிற் குறுநீர்க் கன்னலின், யாமங் கொள்பவ ரேத்தொலி" என மணிமேகலையினும், "பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள், தொழுது காண் கையர் தோன்ற வாழ்த்தி நின், குறுநீர்க்கன்ன லினைத்தென் றிசைப்ப" என முல்லைப்பாட்டினும் வருதலால் அறியலாம். இவற்றுட் பின்னதற்கு, "கடாரத்து நீரிலே காண்கின்ற நினது நாழிகைவட்டிலிற் சென்ற நாழிகை இத்துணை யென்று சொல்லுகையால்" என

நச்சினார்க்கினியருரை வருதலும் நோக்கத்தக்கது. கோடைகாலத்தில் உஷ்ணமிகுதியால் தண்ணீர் வெகுசீக்கிரத்தில் ஆவியாய்ப்போகிற காரணத்தினாலே, நீர்க்கடிகாரங்களைக்கொண்டு கோடைகாலத்திற் கணக்கிடப்படுங் காலவளவைக்கும் மாரிகாலத்திற் கணக்கிடப்படுங் காலவளவைக்கும் உண்டாயிருந்த பெருந்தவித்தியாசத்தினால் மேற்படி நீர்க்கடிகாரங்களும் நாளடைவிலே உதவியற்றனவென்று தெரியவந்தது. அதற்குப்பின்பு ஜனங்கள் தண்ணீருக்குப் பிரதியாகச் சிறுமணலை உபயோகித்து வந்தார்கள். நாளைக்கும் மணற்கடிகாரங்கள் அனேக இடங்களில் உபயோகப்பட்டு வருகின்றன.

பளுவான இருப்புக்குண்டுகளைக் கீழே ஓர்கம்பியின் மூலமாகத் தொங்கவிட்டு அக்குண்டுகள் கீழே இறங்கஇறங்க முள்ளுகள் அசைவதென்கிற ஏற்பாடுடைய ஒருவிதகடிகாரங்களை ஐரோப்பாகண்டத்தில் கி. பி. 1000-வருஷத்திற்குப்பிற்பாடு ஜனங்கள் வழங்கிவந்தார்கள். இட்டலிதேசத்திலே கி. பி. 1300-ம் வருஷத்தில் முதன் முதல் கடிகாரம் மணியடிக்கத் தலைப்பட்டது. 1600-ம் வருஷத்தில் கலிலீயோ என்பவர் நாழிகைவட்டத்தை இயக்கும் தூக்காகிய பெண்டுலஏற்பாட்டைக் கண்டுபிடித்து அதை அநுசரிக்கத் தலைப்பட்டார். அதுமுதற்கொண்டு இப்போது வழங்கிவருகிற கடிகாரஏற்பாடு தினேதினே அபிவிருத்தியடைந்து வந்தது. வாகனாதிகளில் ஏறிப்போகும்போதும் வேறேசந்தர்ப்பங்களிலும் இலேசாய் நினைத்தமாத்திரத்தில் உபயோகப்படும் கைக்கடிகாரங்கள் இப்போதுவழங்கிவருகின்றன. இவைகளை நியூரெம்பெர்க் என்னும் தேசத்து பீடர்ஹீல் என்னுங்கனவானொருவர் 1500-ம் ஆண்டிற்கண்டுபிடித்தார். இவைமுதலிற்கண்டுபிடிக்கப்பட்டபோது நியூரெம்பெர்க்தேசத்து முட்டைகளென்று பரிகாசமாக ஜனங்கள் இவற்றை வழங்கிவந்தார்கள். அது முதல் இதுவரையில் கைக்கடிகாரங்கள் அதிவிசித்திர வேலைப்பாடுகளுடன் வெகுசிற்றுருவத்திலுஞ் செய்யப்பட்டு உலகங்கும் உலவிவருகின்றன. (இது "ஜனவிநோதினி" என்ற பத்திரிகையினின்று, சிலவிஷயங்கள் கூட்டியும் குறைத்தும், எடுக்கப்பட்டது.)

சாதுரியவசனங்கள்.

—————:o:—————

1. ஒரு வித்வான் ஒருகிருகஸ்தன் வீட்டிற்குச் சென்றிருக்கும்போது, மிகவும் உபசாரத்துடன் அமுதுசெய்ய அழைக்கப்பட்டார். வித்வான் கிருகஸ்தன் வேண்டுகோளுக்கிசைந்தனர். அவ்வூரில் வாழையிலை இல்லாததால், ஆலிலை தைத்துப்போடப்பட்டது. அவ்விருவரும் அமுது செய்தவுடன், கிருகஸ்தன் "இவ்வூரில் வாழையிலை இல்லை, தாங்கள் தையல் இலையில் அமுது செய்வதுண்டோ" எனக்கேட்க, அவர் "தையல் இலையில் நான் அமுது செய்தல் வழக்கமின்று, தையல்தான் என் இலையில் அமுது செய்வள்" என்றனர். கிருகஸ்தன் வித்வான் சாதுரியத்தை மெச்சினன்.

2. ஒரு வித்வான் 6-வது வகுப்பிற்குப் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்தார். அவ்வகுப்பில் உத்தேசம் 32-பிள்ளைகளுண்டு. ஒவ்வொருநாளும் பாடம் படிக்காமல் என்றும் இறுதியிலேயே உட்கார்ந்திருக்கும் முருகன் என்ற பையனைக்கோபித்து "நீ என்னபிள்ளை" என்றார். அவன் "நான் செட்டிப்பிள்ளை" எனவே, போதகர் "அதனால்தான் நீ என்றும் கடையில் இருக்கின்றாய்" என்றார்.

3. ஒரு சைவப்பிரசாரகர் விபூதி, ருத்திராக்ஷமணிந்து பக்தியைப்பற்றிப் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்தார். அதைக்கேட்ட ஒருதனவான், அவர் பிரசங்கத்தைப்புகழ்ந்து தங்கத்தினால் ருத்திராக்ஷங்களின் இடையே போடுவதற்கேற்ற வில்லைகள் செய்து, ருத்திராக்ஷத்துடன் கோத்துப் பிரசாரகர் கழுத்தில் அன்புடனணிந்தார். சிலநாட்செல்லத் தங்கவில்லைகளை எவனோ திருடன் அபகரித்துக்கொண்டபின்பு, பிரசாரகரை அந்தத் தனவான் சந்தித்தார். அப்பொழுது தங்கவில்லைகளைக் காணாததால், அவற்றைப் பற்றிக் கேட்டபொழுது, பிரசாரகர் "தாங்கள் பரிசாகவளித்த தங்கவில்லை, தங்கவில்லை" என்றார்.

4. ஓர் ஏழை நல்ல லக்னம் பார்த்து ஓர் அரசனிடம் தன் தரித்திரத்தை நீக்கிக் கொள்ள வந்தான். அரசனோ சோ[illegible]தில்

நம்பிக்கையில்லாதவன். லக்னம் பார்த்து சம்மானம் வாங்கும்படி வந்திருப்பதை முன்பு அறிந்திருந்த அரசன், அவ்வேழைக்கு ஒன்றும் கொடுக்கிறதில்லையெனத் தீர்மானித்திருந்தான். அவ்வேழையோ படியாதவன் ஆனதால், தரித்திரத்தின கொடுமையை ஒரு கடிதத்தில் ஒரு வித்வான் மூலமாய் எழுதுவித்து, நல்ல லக்னத்தில் அரசனிடம் கொடுக்க, அரசன் படித்து வெகுண்டு கடிதத்தைத் துண்டுதுண்டாகக் கிழித்து, ஏழையினிடம் கொடுத்தார். அவ்வேழை மிகவும் வணக்கத்துடன் இருகைநீட்டி வாங்கினதைக் கண்ட அரசன், ஆச்சரியத்துடன் "ஏன் இவ்விதம் செய்தீர்" என, அவ்வேழை "என் தரித்திரம் தங்களால் அதமானதால் அவ்விதம் செய்தேன்" என்றான். அரசன் அவன் சாதுரியத்திற்கு மெச்சிப் பரிசளித்ததுமன்றி சோதிடத்திலும் நல்ல நம்பிக்கைவைத்தான்.

5. அதிபுத்தி கோசமுடைய ஒரேளியவன் ஒருநியாயாதிபதி முன்னிலையில் சாக்ஷிகூறவந்தான். அவனுடைய கல்வித்திறத்தையும் புத்தி நுட்பத்தையுங் கண்டு, அந்தநியாயாதிபதி பொறாமைப்பட்டு அவனினும் தன்னை அதிகக் கல்விமானென்றும் புத்திமானென்றும் அந்த நியாயஸ்தலத்திலுள்ளார் கருதவேண்டுமென்றெண்ணி அந்த சாட்சிக்காரனைப்பார்த்து, "ஓய்! நீ நடந்த விருத்தாந்தத்தைச் சரியாகச்சொல்லவில்லை, நீ திருடனென்பதை உன்முகம்கண்ணாடிபோற்காட்டுகிறது" என்றான். இந்தப்படி வரம்புகடந்துபேசியநியாயாதிபதியைப்பார்த்து அந்த சாட்சிக்காரன் - ஐயா! என்னுடைய முகம் கண்ணாடியானதால் அதில் நீர் உம்முடைய முகத்தைதப் பார்க்கின்றீர் - என்றான். இதைக்கேட்டு நியாயாதிபதி பெருத்த அவமானமடைந்தான்.

6. ஒரு கட்சிக்காரன் நியாயஸ்தலத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது அவனுடைய எதிரியின் நியாயவாதி அவனைப்பார்த்து, 'நீ ஏன் நாய்போற் குலைக்கிறாய்? என்றான். அதற்கு அந்த கட்சிக்காரன்-ஐயா! திருடனைப் பார்த்தால் நாய் குலையாதா? என்றான். இதைக்கேட்ட நியாயவாதி அங்கிருந்தபலரும் நகைக்க அவமானமடைந்தான்.

7. ஓர் அரசன் தன்னுடைய சபாமண்டபத்தில்கொலுவீற்றிருக்கையில் அூரதேசத்திலிருந்து ஒரு சிறந்தவித்துவான் தன்னுடை

ய பாண்டித்தியத்தை அவ்வரசனுக்குத் தெரிவித்துப் பரிசுபெறலாமென்றுகருதி அவ்வரசன் முன்வந்து நின்றான். அவனைக்கண்ட அரசன், தன்முகத்தைப்போல அந்த வித்துவானுடையமுகமிருப்பதைப்பார்த்து, "ஓய்! உம்தயார் இந்த ஊர்வழியாக எப்போதாவது வந்திருப்பளா? என்று வினவினன். அதற்கு அந்தவித்துவான் - மகாப்பிரபு! என்தாயார் இந்த ஊர்வழியாக எப்போதும் வந்ததில்லையென்றும், என்தகப்பனார்மாத்திரம் தேசாந்தரயாத்திரை செய்துகொண்டுவரும்போது இந்நகரத்திலேயே சிலகாலம் வசித்திருந்தாரென்றும் எனக்குக் கேள்வி" என்றான். இதைக்கேட்ட அரசன் சபையார் முன்னிலையில் மிக்க அவமானமடைந்தான்.

ORIENTAL MANUSCRIPT

எண. சேது[illegible]யர்.

புத்தகக் குறிப்பு.

—:o:—

திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம்:—இப்பெயர்கொண்டதொரு நூல், சமீபத்தில் எனது பார்வைக்குக் கிடைத்தது. இது, தொல்காப்பியத்தேவர் என்னும் பழைய புலவரால் (தொல்காப்பியமுனிவரல்லர்) இயற்றப்பெற்ற ஓர் அருமையான கலம்பகமாகும். தமிழ்நாவலர் சரிதையில், "தொல்காப்பியத்தேவர் சொன்னகழிப்பாடலன்றி" என்னும் பாடலைப் பலமுறை படித்திருப்பதுண்டாயினும் அவ்வாசிரியரைப்பற்றியாவது அவர் பாடலைப்பற்றியாவது ஒன்றுந் தெரிந்ததில்லை. இப்போது, மகாமகோபாத்யாயர்: ப்ரம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், அப்புலவரியற்றிய நூலை, அவர் சரித்திரத்துடன் மிகச்செவ்வையாக ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள். இத்தொல்காப்பியத்தேவர், இரட்டையர் காலத்துக்கு முன்பே இக்கலம்பகம்பாடினவரென்று தெரிதலோடு, அவ்விரட்டையரே இந்நூற்பெருமையை "தொல்காப்பியத்தேவர் சொன்னகழிப்பாடலன்றி, நல்காத் திருச்செவிக்கு நானுரைப்ப தேறுமோ" என்று புகழ்ந்திருத்தலால் இக்கலம்பகத்தின் பழமை பெருமைகள் நன்குவிளங்குகின்றன. ஆகவே இதன் வாக்கின் பெருமையைப் பற்றிஅதிகமாகப்புகழ்தல்

மிகையேயாம். ஐயரவர்கள் அருமையும் பெருமையுமான நூல்களைத் தமிழகத்துக்கு உதவும் உரிமைபெற்றிருத்தற் கேற்ப, இவ்வழகிய கலம்பகமும் அவர்கள் ஆராய்ச்சிக்கு உட்பட்டு விளங்குதல், தமிழறிஞர்க்குப்பெருமகிழ்ச்சி விளைக்குமென்பது திண்ணம்.

இதன் விலை அணா 2.

முத்தகபஞ்சவிஞ்சதி:—இப்பெயர்கொண்டசிறுபுத்தகமொன்று யாழ்ப்பாணத்துப் பிரசித்தவித்வானாகிய சுன்னாகம் ஸ்ரீ: குமாரசுவாமிப் பிள்ளையவர்களால் வெளிப்படுத்தப்பட்டுளது. இற்றைக்கு ஐம்பது வருடங்கட்குமுன் பிரபலகவிஞராய் விளங்கியவரென்று தெரியும் முத்துக்குமாரகவிராசராற் பாடப்பெற்றுக் கர்ணபரம் பரையாக வந்த தனிச்செய்யுள்களில், அகப்பட்ட இருபத்தைந்தைக் குறிப்புரையிட்டு விளக்கிக்காட்டி யிருக்கிறார்கள். நம் 'செந்தமிழி'ன் சென்ற தொகுதியில், பிள்ளையவர்கள் "முத்துக்குமாரக்கவிராசர் முத்தகத்திரயம்" என்னுந் தலைப்பின்கீழ், விசேடக் குறிப்புக்களுடன் வெளியிட்ட பாடல்களும் இதனுட்சேர்ந்தவையேயாம். நம்பத்திரிகையில் வெளிவந்த செய்யுள்களைப் படித்திருப்போர், அவற்றின் சொல்லலங்காரநயங்களைக் கண்டு மகிழ்ந்திருப்பாரென்பது திண்ணம். இப்பாடல்கள், யாழ்ப்பாணப்பக்கங்களில் அவர்காலத்து எங்கும்விரும்பிப்படிக்கும்படியான சுவையுடையவாயிருந்தன என்பர். இயற்கையிலே சிறந்தபுலவராய் எல்லாராலும் புகழப்பட்ட இக்கவிராசர் பிள்ளையவர்கட்கு முன்னோராகவும், காலஞ்சென்ற, ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பதித்தநூல்களின்பதிப்புரைகளிலெல்லாம், குருவணக்கமாக அவர்கள்பாடியசெய்யுட்கு உரிமைபூண்டவராகவும் விளங்குதல், நமக்கு அவரிடத்துள்ள மதிப்புப் பின்னும்பெருகுதற்குஏதுவாயுள்ளது. இந்நூலின் விலை அணா, 2, வேண்டியோர் பிள்ளையவர்கட்கெழுதிப் பெறுக.